# தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு இலங்கையில்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 210
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 24 றஜபு 7 புதன்கிழமை (9-9-70)

அண்ணா கோப்பி




பிளாஸ்டிக் கப்பில் தயாரிக்கப் பெற்ற அண்ணா கோப்பியை வாங்கி அதிக லாபம் அடையுங்கள்

வெற்றுக் "கப்களை" சேகரித்து அனுப்பி பெறுமதிவாய்ந்த பரிசுகளைப்பெறுங்கள்.

## பூரண ஆதரவு கிடைக்கும்?
## பேராசிரியர்பிலியோசாநம்பிக்கை

கொழும்பு, செவ்வாய் "இலங்கையில் 1973-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் உலக தமிழாராய்ச்சி நான்காவது மகாநாட்டிற்கு இலங்கை அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்குமென்றும், நான்காவது மகாநாடு சிறந்த முறையில் நடைபெறுவதற்காக பணியாற்றும் நிர்வாகிகளுக்கு அரசாங்கம் சகல உதவிகளையும் வழங்கும் என நான் நம்புகின்றேன்."

தமிழாராய்ச்சிசர்வதேசச் சங்கத்தலைவரான பேராசிரியர் ஜின் பிலியோசா பாண்டிச்சேரி செல்லும்வழியில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர் பிலியோசா மேலும் கூறியதாவது:- இலங்கையில் நடைபெறவிருக்கும் நான்காவது தமிழாராய்ச்சிமகாநாடு, என்றும் நினைவில் நிலைத்து நிற்க கூடியது தேவையான ஒழுங்குகளை செய்வதற்காக மகாநாடு தினத்திற்கு முன்னர் இந்நாட்டிற்கு விஜயம் செய்வேன் என எதிர்பார்க்கின்றேன் தமிழ் ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையம் ஒன்றை சென்னையில் அமைப்பதற்கான தீர்மானத்தை அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கின்றேன். இந்த ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்மொழியில் அக்கறை உள்ள எவரும், எவ்வித பாகுபாடுமின்றி ஆராய்ச்சி நடாத்த அனுமதிக்கப்படுவார்கள்.

## சாகித்திய மண்டல கூட்டுத்தாபனம்
### புதிய சட்டம் வருமாம்

யாழ்ப்பாணம், புதன் சாகித்தியமண்டலம் சம்பந்தமாக புதிய சட்டம் வரவிருக்கின்றது.

சாகித்தி மண்டலத்தின் பணிகளை ஒருங்கிணைக்குமுகமாக கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவப்படும். இதற்கு வழி செய்யுமுகமாகவே இந்தச்சட்டம் கொண்டு வரப்படவிருக்கின்றது

சாகித்தியமண்டல உறுப்பினரான திரு வ பொன்னம்பலம் இந்தத் தகவலை வெளியிட்டார்

இந்தக் கூட்டுத்தாபனத்தின் கீழ் தமிழுக்கென தனியாக ஒரு பிரிவு இருக்கும் முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாக்கவென தனியாக ஒரு பிரிவு இயங்கும்

குழந்தை இலக்கியம் விஞ்ஞான இலக்கியங்களுக்கெனவும் இரு பிரிவுகள் இயங்கும்.

ஏற்கனவே இருந்த சாகித்தியமண்டலம் பற்றிய குறைகள் பற்றியெல்லாம் கிளறப்படமாட்டாதென்றும் இனிமேல் திறமான பணிகளைச் செய்வதற்கான முயற்சிகளிலேயே கவனம் செலுத்தப்படவிருப்பதாகவும் திரு பொன்னம்பலம் மேலும் தெரிவித்தார் புதிய கூட்டுத் தாபனத்துக்கான சட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது

# வடபகுதி பொலிஸ் அதிகாரிகளுடன் பொலிஸ் அதிபர் ஆலோசனை

யாழ்ப்பாணம், புதன் வட பகுதிக்கு நேற்றுக் காலை விஜயம் செய்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா பொலிசார் சம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்கள் பற்றி பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினார்

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் நடந்த பொலிஸ் மகாநாட்டில் திரு. சேனநாயக்கா வடபகுதியில் குற்றத்தடுப்பு, வீதிப் போக்குவரத்து மற்றும் பொலிசாரின் கடமைகள் பற்றியும் விளக்கிக் கூறினார்.

இம்மகாநாட்டில் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம் உட்பட வட பகுதி உதவி பொலிஸ் அதி-ர்களும் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நேற்றுப் பிற்பகல் நடந்த பொலிஸ் தின விழாவில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. சேனநாயக்கா கலந்துகொண்டார்

பொலிசாரின் அணி வகுப்பு, இராணுவ வீரர்களின் சாகசங்கள், குற்றத் தடுப்புக் காட்சிகள் வீதி ஒழுங்குக் காட்சிகள் இவ்விழாவில் இடம்பெற்றன. பெருந்திரளான மக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

## 'இந்தியாவுக்குப் புகையிலை மீண்டும் ஏற்றுமதி செய்க'

மாவிட்டபுரம், செவ். "நீர் இறைக்கும்யந்திரம், உழவுயந்திரம்ஆகியவற்றின் உதிரிப் பாகங்களை ஆட்சியினர் இறக்குமதிசெய்து குறைந்தவிலைக்கு வழங்குக" என்று தேசிய விவசாய முன்னணி காணி, விவசாய உதவி அமைச்சரிடம் வற்புறுத்தியுள்ளது.

தேசிய விவசாய முன்னணித் தலைவர் திரு. விஜயானந்தன், உபகாரியதரிசி ரி இராசரத்தினம், கே தவஞானம், ஆர் ஆர் பூபாலசிங்கம் எஸ். அர்ச்சுணன் ஆகியோர் கொண்ட தூதுகோஷ்டி காணி விவசாயஉதவிஅமைச்சர் திரு எச் எம் நவரத்தினவை நேரில் கண்டு மேற்கண்டவாறு வற்புறுத்தியது.

'உருளைக்கிழங்கை மேலும் ...மென்றும் உருளைக் கிழங்கைப் பாதுகாக்கும் மருந்து வகைகளைத் தருவதன் மூலம் நீண்ட நாட்களுக்கு கிழங்கு பழுதடையாது பாதுகாக்கலாமென்றும் குழு சுட்டிக்காட்டியது.

புகையிலையை முன்புபோல இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றும் பீடிப்புகையிலை செய்பவரிடம் ஆட்சியினர் பீடிப்புகையிலையைக் கொள்வனவு செய்ய வேண்டுமென்றும், நெற்காணிச் சட்டத்தின்கீழ் விவசாய காணிகளையும் கொண்டுவர வேண்டுமென்றும், வெங்காய உத்தரவாத விலையை உயர்த்தி வெளிநாட்டுவெங்காயத்தை தடைசெய்து வடமாகாணத்திலிருந்து இலங்கை பூரா ...

நிதானமான விலைக்கு எல்லாரிடமும் சராசரியாகக்கொள் ...

## நடவடிக்கை எடுப்பதாக உதவி அமைச்சர் உறுதி

கொடிகாமம், செவ். வைத்தியர்கள், மருந்துக் கலவையாளர்கள், ஊழியர்களை உள்ளூராட்சி அதிகார சபையின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று, உள்ளூராட்சி சேவைக்குட்படுத்தப்படாத உள்ளூராட்சி மன்ற சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் மருந்துகலவையாளர் ஊழியர் சங்கத்தி... தூதுக்கோஷ்டி, உதவி உள்...ளூராட்சி மந்திரியிடம் கோரியுள்ளது.

நியமன எம். பி. திரு. எம். ... தின் தலைமையில் இத்தூதுக் கோஷ்டி உதவி மந்திரியைப் ... மணி, இணைக்காரியதரிசிகள் திரு. எஸ். ஆர், கனகலிங்கம், திரு. கே. சிவராசா ஆகியோர் இடம்பெற்றனர்

மருந்துக்கல வையாளர்களுக்கான விசேஷ பயிற்சியளிக்கப்படவேண்டுமென்றும் இத் தூதுக்கோஷ்டி கேட்டுக்கொண்டது. இக் கோரிக்கைகள் மீது உதவி அமைச்சர் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறு...ளித்தார்.

இத்தூதுக்கோஷ்டி கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி தலைமையில் உள்ளூராட்சி அதிகார சபைத் தலைவர் ...ரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேற்றைய மாலைநிகழ்ச்சி

# லூசாக்கா மாநாடு உபதலைவராக ஸ்ரீமா தெரிவு

லூசாக்கா, செப். 8 இன்று ஆரம்பமாகிய ...

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மாநாட் ...

டயஸ்பண்டாரநாயகாபேசுகையில், கம்போடியாவின் ...

கொண்ட தூதுகோஷ்டி சாணி விவசாய உதவி அமைச்சர் திரு எச் எம் நவரத்தினவை நேரில் கண்டு மேற் கண்டவாறு வற்புறுத்தியது.

'உருளைக்கிழங்கை மேலும் கூடுதலாக உற்பத்தி செய்ய நாட்டுக்கு ஏற்ற உருளைக் கிழங்கு வழங்கவேண்டு கொண்டுவர வேண்டுமென றும், வெங்காய உத்தர வாத விலையை உயர்த்தி வெளிநாட்டுவெங்காயத்தை தடைசெய்து வடமாகாணத் திலிருந்து இலங்கை பூராவும் வெங்காயம் விநியோ கிக்கவேண்டுமென்றும் நாற் றுக்கன்றுகளை ஆட்சியினர்

அதி...களும் கலந்துகொண் டனர்.

நிதானமான விலைக்கு எல்லாரிடமும் சராசரியாகக்கொள் வனவு செய்யவேண்டுமென் றும் தூதுக்குழு உதவி அமைச் சரிடம் வற்புறுத்தியது.

உள்ளூராட்சி மந்திரியிடம் கோரியுள்ளது.

நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியத் தின் தலைமையில் இத்தூதுக் கோஷ்டி உதவி மந்திரியைப் பேட்டிகண்டது இத்தூதுக் குழுவில் சங்கத் தலைவர் திரு. எம். எஸ் வி, மாசிலா

...த்தார்.

இத்தூதுக்கோஷ்டி கிளி நொச்சி எம். பி. திரு. வி, ஆனந்தசங்கரி தலைமையில் உள்ளூராட்சி அதிகார சபைத் தலைவர் திரு. டொன் டேவிட்டையும் சந் தித்துக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தது

# 'தனிநபர் வழிபாட்டிற்கு கம்யூ. கட்சியில் இடமில்லை'

## பொன். கந்தையா நினைவுக்கூட்டத்தில் வ.பொ.

யாழ்ப்பாணம், புதன்

'தலைவர்கள் பெரியவர்கள்; அவர்களுடைய கருத்துக்களை மக்கள் ஏற்கவேண்டும் என்பது கம்யூனிசத்தின் தத்துவம் அல்ல. கருத்துக்கள்தான் பெரியவை. கருத்துக்களை தலைவர்கள் ஏற்கவேண்டும் இந்தமுறையிலேயே தான் தனிநபர் வழிபாட்டிற்கு கம்யூனிசக் கட்சியில் இடமில்லை. தனிநபர் வழிபாடு வளர்ந்தால் கருத்துக்கள் மறைந்துவிடும்.

இவ்வாறு யாழ் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் நேற்று நடந்த அமரர் பொன் கந்தையா நினைவு தினக் கூட்டத்தில் திரு வ. பொன்னம்பலம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

அமரர் கந்தையா தமக்கென ஒரு இடத்தை கட்சியிலே ஒதுக்கி வைக்கவில்லை: தமது கருத்துக்களையும் கட்சியின் கருத்துக்களையும் இணைத்துச் செயலாற்றினார்.

என்னைக் கம்யூனிசத்துக்கு கவர்ந்தவர்களுள் அவரும் இராமசாமி ஐயரும் முக்கியமானவர்கள்: ஒரு புதியசமுதாயத்தைக் கட்டி வளர்க்க திரு கந்தையா தம்மையே அர்ப்பணித்தவர்.

அவர் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தறுவாயில் தமிழர் சிங்களவருடன் ஒத்துழைப்பதைத்தவிர வேறு விமோசனம் கிடையாது என்று சொல்லிக்கொண்டே உயிர் நீத்தார். அவரது கூற்றுக்கள் இன்று உண்மையாகி வருவதைக் காண்கின்றோம்,

திரு அ. வைத்திலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

'கம்யூனிஸ்டுகளாகிய நாம் அரசியல் மட்டும் பேசக் கூடாது. மக்களின் அன்பிற்குப் பாத்திரமானவர்களைப் போற்றவும் பழகவேண்டும். அமரர் கந்தையா மக்களின் அன்பிற்கு எவ்வளவு பாத்திரமானவர் என்பது அவர் மக்களால் ஆட்சிமன்றத்திற்கு அனுப்பப்பட்டகாலம் எடுத்துரைக்கின்றது. அப்பொழுதெல்லாம் இன்று போல எல்லோருமே சோஷலிசம் பேசவில்லை.

திரு எஸ். விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது:

போராடுபவனும் போரில் வெற்றியீட்டுபவனும் வீரர்களல்ல. இலட்சியத்துக்காக வாழ்க்கையை அர்ப்பணிப்பவனே வீரன். அமரர் கந்தையா ஓர் இலட்சிய வீரனாக விளங்கினார்,

தாழ்த்தப்பட்ட சமூகத்தை ஒதுக்கி வைத்தவர்களை, மழை அவனை விலக்கிப் பெய்வதில்லை, வெயில் அவனை விலக்கி எரிவதில்லை. காற்று அவனைவிலக்கி வீசுவதில்லை, குளிர் அவனை நீக்கி அடிப்பதில்லை என்ற கவிதையைக் காட்டி சமூகமே நீமட்டும்ஏன் அவனை விலக்கி வைக்கிறாய் என்று முழங்கினார்.

திரு வி, அரியரத்தினம் பேசுகையில்: அமரர் கந்தையா பல தொகுதிகளைப் பிடித்துக்கொண்டு ஆட்சிமன்றம் நுழையவில்லை. பல நல்ல கருத்துக்களைப் பிடித்துக்கொண்டே தனிமனிதனாக ஆட்சிமன்றம் நுழைந்தார், அப்படியிருந்தும் இத்தனிமனிதனுக்கு நாம் நினைவுவிழா நடத்துகிறோமென்றால் அவர் ஒரு சிறந்த தலைவர் என்பதற்காகவே' என்றார்,

ஜனாப் மீரான் சாகிபு திருவாளர்கள் எஸ் சிவானந்தன் எச். எஸ். லியனகே, டி எம் பரமானந்தன், கே. நல்லதம்பி, எஸ். விஜயானந்தன் பி, எஸ். செல்வராசா எஸ், ஜெகநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள்,

## கிராமங்களில் கயரோக மதிப்பீடு

கோட்டை, செவ்வாய்

இலங்கையிலுள்ள கிராமங்களில் கயரோக மதிப்பீடுசெய்ய சுகாதாரதிணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது,

இதன்சார்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தைச் சேர்ந்த 10 நிபுணர்களின் உதவி கிடைக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது,

நகரங்களுக்குத் தொலைவிலுள்ள கிராமங்களில்தான் முக்கியமாக இந்த ஆய்வு நடைபெறும் என்றும் எக்ஸ்றே கருவிகள் மூலம் நோயாளிகள் பரிசோதிக்கப் படுவரென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

# 100 முஸ்லிம் குடும்பங்களுக்கு பூநகரியில் காணி

பூநகரி, செவ்வாய்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 100 முஸ்லிம் குடும்பங்களுக்கு பூநகரியைச் சேர்ந்த நாச்சிக்குடா என்ற இடத்தில் காணிகள் வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

முன்னாள் யாழ். எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இக்குடியேற்றத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி செய்து வருகின்றார்.

இக்குடியேற்றத் திட்டத்திற்கான காணிக்கச்சேரி இம்மாதம் 5-ந் திகதி யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்றது.

இக்குடியேற்றத் திட்டத்தில் முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்று பழைய காலமுதல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரியிலும் 'சேகுவேரா' பயமுறுத்தல்

மட்டுவில், புதன்

சாவகச்சேரிப்பகுதியிலும் சேகுவேரா இயக்கத்தினரின் நடமாட்டம் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது இங்குள்ள பொது இடங்களில் சேகுவேரா இயக்கத்தினரின் பல சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

தமிழரசுக்கட்சியும் காங்கிரஸ் கட்சியும் ஒன்றுசேர்; சாவகச்சேரியில் சிங்களஆசிரியர்கள் தேவைதானா? என்பனபோன்ற வாசகங்கள் இந்தச் சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளன. சேகுவேரா இயக்கத்தினரால் எழுதியதாக அதில் கூறப்பட்டுள்ளது.

விஷமிகள் சிலர் சேகுவேரா இயக்கம் என்ற பெயரை வேண்டுமென்றே எழுதிஇதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகவும் கூறப்படுகிறது.

## இன்று

மட்டுவில், புதன்

நீர்வேலி அரசகேசரி விநாயகர் ஆலயத்தில் மூலத் திருவிழாவான இன்று கல்வயலூர் சங்கீத பூஷணம் திரு. சி. விஞசித்தம்பி 'பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்' என்னும் பொருள் பற்றிய சிறப்பு உபன்நியாசம் நிகழ்த்துவார்.

திரு. சி. விஞசித்தம்பி, கந்தபுராணம் விரிவுரையும் தொடர்ந்து இங்கு நடாத்தி வருகிறார்

## 'வடக்கில் இவர்களை சிங்கள ஆசிரியராக்குக'

மாவிட்டபுரம், செவ்

'யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தின் தரத்தை உயர்த்தி உயர் கல்வி கற்க வசதி செய்து தருக' என யாழ். ஸ்ரீலங்கா சோஷலிச முன்னணித் தூதுக்கோஷ்டி கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத்திடம் வற்புறுத்தியுள்ளது.

வடபிரதேச ஸ்ரீலங்கா சோஷலிச முன்னணியின் தூதுக்கோஷ்டி திரு. வ. பொன்னம்பலம், திரு. எம். சி. சுப்பிரமணியம் எம் பி தலைமையில் கல்வியமைச்சரை சந்தித்து மேற்கண்டவாறு வற்புறுத்தியது

இத்தூதுக்கோஷ்டி மற்றும் வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன், காணி நீர்ப்பாசன அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோரையும் நேரில் கண்டு தமது கஷ்டங்கள் பற்றி வற்புறுத்தியது.

வடமாகாணத்தில் வாழ்கின்ற சிங்களத்தில் சித்தி எய்திய சிங்கள வாலிபர்களை வடமாகாணத்தில் சிங்கள ஆசிரியர்களாக நியமிக்கவேண்டுமென்றும் தூதுக்கோஷ்டி வற்புறுத்தியது.

வடமாகாணத்தில் வாழும் சிங்கள மக்களின் வசதியை முன்னிட்டு நவீன வசதிகள் கொண்ட வீடமைப்புத்திட்டமொன்றை உருவாக்கவேண்டுமென்றும் தூதுக்கோஷ்டி வற்புறுத்தியது.

# உபதலைவராக ஸ்ரீமா தெரிவு

லூசாக்கா, செப். 8

இன்று ஆரம்பமாகிய கூட்டுச் சேரா நாடுகளின் 3-வது மாநாட்டு மாலை நிகழ்ச்சிகளுக்கு இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உபதலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இன்று மாலை ஸாம்பியா ஜனாதிபதி கவுண்டா தலையில் மாநாடு ஆரம்பமானது. 50 நாடுகளைச் சேர்ந்த அரசாங்க பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மாநாட்டில் பேசுகையில், அரசியல், பொருளாதாரம் போன்ற விடயங்களில் செய்து முடிக்கப்படாத புரட்சிகளைச் செய்து முடிக்க வேண்டும் என்று சகல நாட்டுப் பிரதிநிதிகளையும் கேட்டுக் கொண்டார். போராட்டம் தோல்வியடைவதில்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கை உள்ளூராட்சி உள்நாட்டு, பொது நிர்வாக அமைச்சர் திரு, பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயகாபேசுகையில், கம்போடியாவின் லோவ்நொல் அரசாங்கப் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொள்வதை இலங்கை எதிர்ப்பதாகக் கூறினார்.

யுகோஸ்லவியா ஜனாதிபதி திரு டிட்டோ, எதியோப்பியாசக்கரவர்த்தி ஆகியோரும் பேசினர்.

நடுநிலைமை நாடுகளின்

## உச்சி மகாநாட்டில் சிகானுக் அரசுக்கு இடம்? மகாநாடு முடிவு செய்தால் இலங்கை ஆதரிக்கும்

லூசாகா, செப். 8

நடைபெற்றுக் கொண்டிருக்கும் நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் கம்போடியக் குழுவை நாம் அனுமதிப்பது சரியல்ல. தற்பொழுதைய கம்போடிய அரசுக்கு கம்போடிய மக்களின் முழுமையான ஆதரவு இருப்பதாகக் கருத முடியாது. தலைநகரும் ஏனைய சிலபகுதிகளுமே அவர்கள் கையில் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, நாட்டில் தமக்குள்ள எதிர்ப்பை சமாளிப்பதற்கு வெளி நாட்டு உதவிகளைக் கோரியுள்ளதோடு, அவற்றின் உதவிகளைப் பெற்றுமிருக்கின்றது. ஆனபடியால் தற்போதைய அரசின் குழு உச்சிமகா நாட்டில் கலந்து கொள்வதை இலங்கை எதிர்க்கிறது என லூசாக்காவில் நேற்று நடைபெற்ற நடுநிலைமை நாடுகளின் வெளிநாட்டமைச்சர் கூட்டத்தில் பேசுகையில், திரு பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கம்போடிய முன்னாள் இளவரசர் சிகானுக், இதற்குமுன் நடைபெற்ற கூட்டுச்சேரா நடுநிலைமை நாடுகளின் இரண்டு மகாநாடுகளில் கலந்து கொண்டார். அவரது அரசைப்பிரதிநிதித்துவப் படுத்தும் தூதுக்குழுவிற்கு, உச்சி மகாநாட்டில் ஆசனமளிக்க இக் கூட்டம் முடிவு செய்யுமானால், அதற்கு இலங்கை அரசு தன் ஆதரவைக் கொடுக்கும் என்றார்.

பாடசாலைகள்

## ஜனவரிமுதல் இருபிரிவுகளாகும்

கோட்டை, செவ்வாய்

அடுத்தாண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து நாட்டில் உள்ள சகல பாடசாலைகளும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்படும் என சகலபிரதேச கல்விமா அதிபர்களுக்கும் கல்வியமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. உடுகம அறிவித்துள்ளார்.

புதிய கல்வி முறையின்படி கனிஷ்ட வித்தியாலயங்கள் யாவற்றிலும் முதலாம் வகுப்புத் தொடக்கம் 8ம் வகுப்பு வரையும் நடைபெறும். உயர்நிலைப்பள்ளியில் 9-ம் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் புகுமுக வகுப்பு வரை நடைபெறும்.

தற்போது 9-ம் வகுப்பில் படிக்கும் மாணவர்களை வகுப்பேற்றுவதற்கு வேண்டிய முயற்சியை யெடுக்கவேண்டும் என பிரதேச கல்விமா அதிபர்கள் கோரப்படுகிறார்கள். வகுப்பறையில் இடநெருக்கடியைக் குறைப்பதற்கு இவ்வாறு வகுப்பேற்றுதல் வழிவகுக்கும் எனக் கருதப்படுகிறது. கனிஷ்ட பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களும் நியமிக்கப் படுவர் என திரு. உடுகம தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு இலாகா—யாழ்கிளை

# விண்ணப்பங்கள் புகடுகளில் தேங்கிக்கிடக்கின்றன?

யாழ்ப்பாணம், புதன்

தேசிய வீடமைப்பு இலாகாவின் யாழ்ப்பாணக்கிளைகளுக்குப் போய் சேரும்விண்ணப்பங்கள் யாவும் முன்னைய அரசாங்க அதிகாரிகளின் சமையல் அறையில் உள்ள அடுப்புகளிலேயே வைக்கப்பட்டு வருகிறதாம் மேற்படி இலாகாவின் காரியாலயம் பழைய சமையல் அறை ஒன்றில் இருந்து வருவதே இதற்குக் காரணமாகும்.

வடமாகாணத்தில் பண வசதியின்றியும், வேறுபல காரணங்களினாலும்வீடின்றி வசிப்பவர்களின் எண்ணிக்கை 40,000 மக்கள் என வீடமைப்பு இலாகாவின் புள்ளி விபரம் ஒன்று கூறுகிறது. வீடுகட்டுவதற்கு ரூபா 2000 தொடக்கம் 15000 ரூபா வரை கடன்கோரி விண்ணப்பித்தவரின் விண்ணப்பங்கள் ஏராளமாக இங்கு குவிந்துள்ளன! இதுவரை 800 பேருக்கு மட்டுமே வீடுகட்டும் கடன் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய நூற்றுக் கணக்கான விண்ணப்பங்களும் இங்கு தேங்கிக் கிடக்கின்றன. அதுவும் சமையல் அறையில் உள்ள புகட்டிலேயே வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பழைய கச்சேரிக் கட்டிடத்தில் உள்ள இந்தக் காரியாலயத்துக்கு டெலிபோன் கூட இல்லை. இதனால் இக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகிறார்கள்.

அனுராதபுரத்திலுள்ள காரியாலயத்திலிருந்து இருவாரங்களுக்கு ஒரு தடவை உதவி ஆணையாளர் இங்கு விஜயம்செய்கிறார். இதினால் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்குப் பதில் கிடைக்கவே மாதக்கணக்காகின்றதாம். (குவிம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்


### தேவை

வீட்டுவேலை செய்வதற்கும், குழந்தையைப் பராமரிப்பதற்கும் வெளி நாட்டுக்கு அழைத்துச் செல்வதற்கு ஒரு பெண் தேவை. கூடிய சம்பளம் கொடுக்கப்படும். விபரங்களுக்கு விளம்பர இல: 2931 ஈழநாடு மேற்பார்த்து என விண்ணப்பிக்கவும். 2931

தட்டெழுத்து இயந்திரம்: நல்ல நிலையிலுள்ள உபயோகித்த தமிழ் தட்டெழுத்து இயந்திரம் உடன் தேவை. விலையைக் குறித்து எழுதுக. லான்ட் இன்வெஸ்ட் மென்ட், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2934

### விற்பனைக்கு

லொறி:
நல்ல நிலைமையிலுள்ள 5 தொன் நிறையுள்ள இசுஸ் 22ஸ்ரீ 6558. உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ரி. ஆர். டி. சொய்சா 109, பிரதான வீதி, அனுராதபுரம். 2190

வயல்:
பூனகரி நல்லூரில் கேரதீவு - கிளிநொச்சி பஸ் ரோட்டுக்கும் சங்கக்கடைக்கும் அருகாமையில் 100 பரப்பு வயலும் பனைகளும் உடனடியாக விற்பனைக்குண்டு. கால போகம் விதைக்கக்கூடியது. பரப்பு ரூபா 90.00. நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். சண்முகம் கந்தையா, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். 2937


# உச்சநிலை அடைந்து வரும் 'ஈழநாடு' கரபந்தாட்டப் போட்டி
# 'செற்-அப்' விளையாட்டு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்
'ஈழநாடு' ஆதரவில் தற்போது யாழ். மத்திய கல்லூரியின் கரபந்தாட்டத் திடலில் நடைபெற்றுவரும் கரபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியைதின மும்பெரும் திரளான மக்கள் கண்டுகளித்து வருகின்றார்கள் 'மின் ஒளியில் நடைபெறும் போட்டிகளைப் காண்பதற்காக வரும் ரசிகர்கள் கூட்டமே மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றது. நாட்கள் செல்லச் செல்லபோட்டிகளின் தரம்மிக உச்சக் கட்டத்தைஅடைந்த வண்ணமே இருக்கின்றது.

'ஈழநாடு' கரபந்தாட்டப் போட்டியில், இரண்டாம் நாள் நடைபெற்றபோட்டிகளின் விபரம் வருமாறு:-

### பொலிஸ் யூனியன் வெற்றி

பருத்தித்துறை பொலிஸ் யூனியனுக்கும், தையிட்டி ஸ்ராஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்றபோட்டியில்பொலிஸ் யூனியன் வெற்றிபெற்றது. இரு கோஷ்டியினரிடையே நடைபெற்ற மூன்று ஆட்டங்களில் முதல் ஆட்டத்திலும், மூன்றாவது ஆட்டத்திலும் பருத்தித்துறை பொலிஸ்யூனியன் 14-7, 14-1 புள்ளிகளால் வெற்றிபெற்றது. தையிட்டி ஸ்ராஸ் விளையாட்டுக் கழகம் இரண்டாவது ஆட்டத்தில் மட்டும் 16-14 புள்ளிகளால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. எஸ். சதாசிவம் மத்தியஸ்தம் வகித்தார்.

### காந்திஜி வெற்றி

ஊர்காவற்றுறை காந்திஜி விளையாட்டுக்கழகத்துக்கும், இணுவில் இந்து விளையாட்டுக்கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், காந்திஜி கழகம் 2-வது 3-வது ஆட்டங்களில் 14-7, 14-6 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இணுவில் இந்துக் கழகம் முதலாவது ஆட்டத்தில் மட்டும் 14-3 புள்ளிகளால் வென்றது. இப்போட்டிக்கு திரு கே. எஸ். மயில்வாகனம் மத்தியஸ்தம் வகித்தார்.

### கரவெட்டி வெற்றி

கரவெட்டி யூனியனுக்கும் நீர்வேலி யுனைட்டட்டுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், கரவெட்டி வெற்றி பெற்றது. 2-வது 3-வது ஆட்டங்களில் கரவெட்டியூனியன் திறமையாக விளையாடி 14-7, 14-6 புள்ளிகளால் வெற்றிபெற்றது. முதலாவது ஆட்டத்தில் மட்டும் நீர்வேலி யுனைட்டட் 16-14 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. எஸ். சுப்பிரமணியம் மத்தியஸ்தம் வகித்தார்.

### கே. கே. எஸ். வெற்றி

கே. கே. எஸ். யுனைட்டட் கழகத்துக்கும், சுன்னாகம் கணேஸா விளையாட்டுக்கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் கே.கே. எஸ். கோஷ்டி 14-2, 16-14 புள்ளிகளால், எதிர்க் கோஷ்டியை வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. பத்மநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

### வளர்மதி வெற்றி

சாவகச்சேரி, வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கும், இணுவில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில் வளர்மதிக்கழ[illegible]

...ததினல், யாழ் கரபந்தாட்டக் கழகம், போட்டியில் கலந்துகொள்ளாமலே வெற்றியைத் தட்டிக்கொண்டது.

'ஈழநாடு' கரபந்தாட்ட போட்டியில் மூன்றாவதுநாள் நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

### கலாஜோதி வெற்றி

கலாஜோதி விளையாட்டுக் கழகம், கிளிநொச்சி விளையாட்டுக் கழகத்தை 2—1 ஆட்டங்களால் வெற்றிபெற்றது இப்போட்டிக்கு திரு. எஸ். மயில்வாகனம் மத்தியஸ்தம் வகித்தார்.

### பொம்பஸ் வெற்றி

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகத்தைவதிரி பொம்பஸ் மிக இலகுவாக 2—0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. பத்மநாதன் மத்தியஸ்தம்வகித்தார்.

### ஊர்காவற்றுறை வெற்றி

ஊர்காவற்றுறை காந்திஜீ விளையாட்டுக் கழகத்துக்கும் கே. கே. எஸ். டெவலப்மன் போட் 'பி' பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில்ஊர்காவற்றுறை கோஷ்டி 2—1 ஆட்டத்தால் வெற்றிபெற்றது இப்போட்டிக்கு திரு சதாசிவம் மத்தியஸ்தம் வகித்தார்.

### கே. கே. எஸ். வெற்றி

கே கே. எஸ். டெவலப்மன் போட் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும், கலைநகர் சித்தங்கேணி விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், கே. கே.எஸ். கோஷ்டி 2—1ஆட்டத்தால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. எஸ். சுப்பிரமணியம் மத்தியஸ்தம்வகித்தார்.

### விநாயகர் வெற்றி

நீர்வேலி ஸ்ரீவிநாயகர் கோஷ்டி, மகாமாரி விளையாட்டுக் கழகத்தை 2—0 ஆட்டத்தால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு [illegible]சிவம் மத்தியஸ்தம் வகித்தார்.

### நவஜீவனம் வெற்றி

ந[illegible] விளையாட்டுக் கழ[illegible] விளையாட்டுக் கழகத்தை [illegible]0 ஆட்டத்தால் வெற்றி[illegible]

### வல்வெட்டித்துறை வெற்றி

வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகத்துக்கும், ஊர்காவற்றுறை தம்பாட்டிவிளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில், ஈற்றில் வல்வெட்டித்துறைவெற்றிபெற்றது. இப்போட்டியில் தம்பாட்டிக் கழகத்தின் விளையாட்டு சிறப்பாக இருந்தபோதிலும், இப்போட்டியில் தம்பாட்டிக் கழகத்தினர் எதிர்பாராதவிதமாக 2—1 ஆட்டத்தால்தோல்வியடைந்தனர். இப்போட்டிக்கு திரு. பத்மநாதன் மத்தியஸ்தம் வகித்தார் (தே. நி)


2-வது வெற்றி வாரம்

ராஜா – யாழ்ப்பாணம்

(10-30, 2-30, 6-30, 9-45

✱ துடிக்கும் இரத்தம் பேசட்டும்!
✱ துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்!!
✱ உழைக்கும் வர்க்கம் சேரட்டும்!!!
✱ உரிமை உடமை காணட்டும்!!!

சோகத்தாய் சாரதாவின் உணர்ச்சி நடிப்பைக் காண வாரீர்.

செம்மீன் ஷீலா, சாரதா, மது, பிரேம்நசீர், திக்குரிச்சி மற்றும் பலர் நடித்த

இந்திய ஜனாதிபதியின் ஊர்வசி பரிசுபெற்ற

துலாபாரம்


# கூடைப்பந்தாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம், புதன்
'ஈழநாடு' ஆதரவில் நடைபெறும் கூடைப் பந்தாட்டப்போட்டி இன்று யாழ். மத்தியகல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் மிக கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

இப்போட்டியில் ஏழு விளையாட்டுக்கழகங்கள் கலந்துகொள்ளுகின்றன. சென்ற வருடம் 'ஈழநாடு' நடாத்திய கூடைப் பந்தாட்டப் போட்டியில் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்ட சென். பற்றிக்ஸ் கல்லூரி இம்முறையும் இப்போட்டியில் கலந்து கொள்ள முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் கோஷ்டிகள் அனைத்தையும் 'ஏ', 'பி' பிரிவுகளாகப் பிரித்து போட்டிகள் நடைபெறும். 'ஏ' பிரிவுக் கோஷ்டிகள் வருமாறு:

சென். பற்றிக்ஸ் கல்லூரி 'ஏ', கோப்பாய் விளையாட்டுக் கழகம், மத்தியகல்லூரி 'பி', மாமெமோரியல் கழகம்.

'பி' பிரிவுக் கோஷ்டிகள் வருமாறு:

சென். பற்றிக்ஸ் 'பி', மத்தியகல்லூரி 'ஏ', ஓல்கோஸ் கழகம்.

இன்று ஆரம்பமாகும் இப்போட்டியில் முதலில் சென். பற்றிக்ஸ் 'ஏ' கோஷ்டியும், கோப்பாய் விளையாட்டுக் கழகமும் மோதும் இரண்டாவது போட்டியில் மாமெமோரியக் கோஷ்டியும், மத்திய கல்லூரி 'பி'பிரிவுக் கோஷ்டியும் மோதும். மூன்றாவது போட்டியில் மத்தியகல்லூரி 'ஏ' கோஷ்டியும், சென். பற்றிக் கல்லூரி 'பி' கோஷ்டியும் மோதும்.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. பாலசிங்கம் மேற்கொண்டுள்ளார். (தே. நி.)

# கொக்குவில் இந்து அபார வெற்றி

திருநெல்வேலி, புதன்
கடந்த ஞாயிறன்று மாலை கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. மூன்று பிரிவுகளுக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டியில் மூன்று பிரிவிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியே வெற்றியீட்டியது.

மூன்றும் பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற போட்டி மிகவும் ருசிகரமாக நடைபெற்றது. மானிப்பாய் இந்துக்கல்லூரி வீரர் கிருபானந்தன் கொக்குவில் இந்துக்கல்லூரி வீரர்களைப் பலமுறை கோல் இழக்கச் செய்து மிகவும் திறமையாக விளையாடினார். இறுதியில் 1—0 கோல்களால் கொக்குவில் இந்துக்கல்லூரி வெற்றியீட்டியது.

இரண்டாம் [illegible]வுப் போட்டியும் ஆரம்பத்தில் மிகவும்விறுவிறுப்பாக நடைபெற்றது. இடைவேளைக்கு முன்பே கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டு கோல்களைப்போட்டது. மானிப்[illegible] வில் இந்துக் கல்லூரிவெற்றியீட்டியது. இதற்கு யோகநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

முதலாம் பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற போட்டி ஆரம்பத்திலேயே மிகவும் உச்சக் கட்டத்தையடைந்திருந்தது. போட்டி ஆரம்பமாகி சில நிமிடங்களிலேயே கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர் மனோகரன்இரு கோல்களைப் போட்டார் கொக்குவில் கோஷ்டி காப்டன் சந்திரநாதன் மானிப்பாய் வீரர்களின்முயற்சிகளையெல்லாம் முறியடித்து மிகத்திறமையாக விளையாடித் தமது கோஷ்டியை மேலும் 5 கோல்களைப் போடச் செய்தார். இறுதியில் 7—0 கோல்களால் கொக்குவில் இந்துக்கல்லூரி வெற்றியீட்டியது. இதற்கு ஜெயராசா மத்தியஸ்தராகக்கடமையாற்றினார்.

# சந்தேக நபர் வீட்டில் திருட்டுப்போனபொருட்கள்

மாவிட்டபுரம், செவ்வாய்
அராலி வடக்கில் பட்டப் பகலில் நடந்த திருட்டுக் குறித்து சந்தேக நபர் ஒருவர் பொருள்களுடன் கைதானார்.

அராலி வடக்கைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை என்பவர் தமது வீட்டில் இருந்து 450 ரூபா பெறுமதியான கைக்கடிகாரம், பாக்கர் பேனா உட்பட மற்றும் பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்திருந்தார். இதையடுத்து தீவிர விசாரணையில் ஈடுபட்ட பொலிசார் அதே ஊரைச்சேர்ந்த ஒருவரைச் சந்தேகத்தின்பேரில் கைது செய்து விசாரணை செய்து அவரின் இருப்பிடத்தைச் சோதனையிட்டபோது திருட்டுப்போனதாகக் கூறப்பட்ட பொருட்கள் இருக்கக்காணப் பட்டன. பொலிசார்அவற்றைக் கைப்பற்றி தொடர்ந்து விசாரணை செய்கின்றனர்.

# புலோலி மக்களின் கோரிக்கை

நெல்லியடி, செவ்.
புலோலிதெற்கு, புலோலி மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் தங்களை பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோரில் சகல தொடர்புகளை செய்ய ஏற்பாடு செய்யுமாறு உடுப்பிட்டி எம். பி. யிடம் கோரியுள்ளனர். வடமராட்சி காரியாதிகாரி பிரிவுதொகுதிவாரியாகப் பிரித்த காரணத்தினல் புலோலி தெற்கு, மேற்கு பகுதி மக்கள் உடுப்பிட்டித் தொகுதி காரியாதிகாரி கந்தோரில் தொடர்பு கொள்ளுகிறார்கள்.

பருத்தித்துறைக்கு அண்மையில் புலோலிக் கிராமம் இருப்பதாலும், புலோலி மக்களுக்கு உடுப்பிட்டி காரியாதிகாரி கந்தோர் அதிக தொலைவில் இருப்பதாலும் தங்களை பருத்தித்துறை காரியாதிகாரி . பிரிவுடன் தொடர்பு கொள்ளச்செய்யுமாறு உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. ஜெயக்கொடியிடம்இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

# 'விளையாட்டுப்போட்டிகள் ஒழுக்கத்தை வளர்ப்பன'

— பதில் அரசாங்க அதிபர்

புத்தூர், செவ்வாய்
"ஒரு மனிதன் சுகதேகி[illegible] அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் கூறினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 9—9—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துலாபாரம்

(மலையாளம்)
(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

யாழ் - வின்சர் திரையில்
தினச்ரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்; ஜெய்சங்கர்,
ராஜஸ்ரீ, நிர்மலா
நடித்த
## பூவா தலையா

கடைசி 2 தினங்கள் மட்டும்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
(பிரிப்போயா போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும் பலர் நடித்த
## துணைவன்

11-ந் திகதி முதல்
இந்திய ஜனாதிபதியின் ஊர்வசி பரிசு பெற்ற
சாரதா நடிக்கும்
## துலாபாரம்
(தமிழ்)

---

வளர்மதி வெற்றி

சாவகச்சேரி, வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கும், இணுவில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில் வளர்மதிக்கழகம் 14-11, 14-13 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இணுவில் கோஷ்டி 2-வது ஆட்டத்தில் மட்டும் 14-2 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இக் கோஷ்டியில் 60 வயதுடைய கே. இரத்தினம் என்பவருடைய விளையாட்டு ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டைப்பெற்றது. இப் போட்டிக்கு திரு. கே. குணரட்ணம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### நீர்வேலி வெற்றி

நீர்வேலி யுனைட்டட் 'பி' பிரிவுக் கோஷ்டிக்கும், உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்றபோட்டியில் நீர்வேலி யுனைட்டட் மிக இலகுவாக 14—7, 14—10புள்ளிகளால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. எஸ். சதாசிவம் மத்தியஸ்தம் வகித்தார்.

யாழ். கரபந்தாட்டக் கழகத்துக்கும் மீசாலை கணேசா விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெறவிருந்த ஆட்டத்தின்போது கணேசா கழகம் ஆட்ட நேரத்தின் போது மைதானத்துக்குவரா ...சிவம் மத்தியஸ்தம் வகித்தார்.

### நவஜீவனம் வெற்றி

நவஜீவனம் விளையாட்டுக் கழகம், வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்தை ...0 ஆட்டத்தால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு கே எஸ் மயில்வாகனம் மத்தியஸ்தம் வகித்தார்

இரண்டாம் ...ப் போட்டியும் ஆரம்பத்தில் மிகவும்விறுவிறுப்பாக நடைபெற்றது. இடைவேளைக்கு முன்பே கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டு கோல்களைப்போட்டது. ...ணிப் பாய் இந்துக் கல்லூ... ஒரு கோலைப்போட்டது இறுதியில் 2—1 கோல்களால் கொக்கு...

---

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
ஜெமினி-சாவித்திரி
நடித்த
**கற்புக்கரசி**

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9 30
போயா, பிரிப்போயா 2-30
ஜெய் சங்கர் - கே. ஆர் விஜயா
நடித்த
**பஞ்சவர்ணக்கிளி**

REGAL
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Pre-Poya, Poya 4 Shows
Guiliano Gemma
in
ADIOS GRINGO

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45p m
Lloyd Bridges,
Joan Blackman
in
DARING GAME
[Color]

---

ராணி ஜெமினி — சௌகார்ஜானகி
(யாழ்ப்பாணம்) நாகேஷ்—ஜெயந்தி
தினசரி 3 காட்சிகள் நடித்த
## இரு கோடுகள்

---

‘இரு கோடுகள்”
# பரிசு போட்டி முடிவு

1-ம் பரிசு: இல. 632
நா. சுப்பிரமணியம்,
19, யாழ்வீதி, யாழ்ப்பாணம்.

2-ம் பரிசு: இல. 1167
உ. தேவேந்திரராஜா,
புகையிரத நிலையம், யாழ்ப்பாணம்.

3-ம் பரிசு: இல. 2671
எஸ். பசுபதி,
உரும்பராய் கிழக்கு.

4-ம் பரிசு: இல. 658
பி. லோகநாதன்,
டி. எஸ். கந்தோர், யாழ்ப்பாணம்.

5-ம் பரிசு: இல. 4308
எஸ். மாலினி,
107, சென்ற் யோசேப் தெரு,
கொழும்பு-4.

6-ம் பரிசு: இல. 4161
அருள்ராணி,
33, கதீட்றல் ரேட், யாழ்ப்பாணம்.

7-ம் பரிசு: இல. 3360
பா. சோதிமதி,
மாரிசன்கூடல், இளவாலை.

பரிசுப் பொருட்கள் 20-9-70 ஞாயிற்றுக் கிழமை 6-30 மணிக் காட்சி இடைவேளையின் போது வழங்கப்படும்.

---

## ஒழுக்கத்தை வளர்ப்பன’

— மதில் அரசாங்க அதிபர்

புத்தூர், செவ்வாய்

‘‘ஒரு மனிதன் சுகதேகியாக வாழவேண்டுமானுல் பாடசாலையில் கல்வி கற்பவர்களும் சரி, கிராமங்களில் உள்ளவர்களும் சரி அனைவரும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி தோல்விகளை நல்மனதோடு ஏற்றுக்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். விடாமுயற்சியினுல்தான் ஒருவன் வெற்றி காணமுடியும்.’’

மேற்கண்டவாறு வலிகாமம் கிழக்கு விளையாட்டுக் கழகச் சங்கமம் நடாத்திய மெய்வல்லுநர் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். பதில் அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் கூறினர்.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் வலி. கிழக்கு காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற விழாவில் அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றும் போது அதில் சில ஒழுங்கு முறைகளைக் கையாள வேண்டி ஏற்படும். இதனுல் மனிதன் ஒழுக்கத்தையும் நல்ல குணதிசயங்களையும் கற்றுக்கொள்ளமுடிகிறது.

‘‘தற்பொழுது உள்ள அரசாங்கம் நாட்டுமக்களுக்கு நன்மையான சில திட்டங்களைச் செயல்படுத்தவுள்ளது. எனவே நீங்கள் கல்வித்துறை, விளையாட்டுத்துறை ஆகியவற்றில்பங்குகொண்டு சுகதேகிகளாக வாழ்ந்து பொருளாதாரத்தைப் பெருக்க முன்னிற்க வேண்டும்.’’

......

## துன்னலை சகாயமாதா உற்சவம்

உடுப்பிட்டி, செவ்.

துன்னலை வடக்கு சதா சகாய மாதா ஆலய வருடாந்த உற்சவம் எதிர் வரும் 17-ந் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நான்கு தினங்கள் நடைபெறும். முதல் நாள் இரவு திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும், ஆராதனையும் நடைபெறும். இவ்விழாவின் கடைசிநாளாகிய 20-ம் திகதி அதி. வந்தனைக்குரிய உதவி மேற்றிராணியார் வண, லியோ அன்ரனி புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தைத் திறந்துவைப்பார். பெரிய பாடற்பூசையின் பின் உதவி மேற்றிராணியாருக்குக் கத்தோலிக்க மக்களால் வரவேற்பளிக்கப்படும், இவ்விழாவை கட்டளைக் குரவர் வண யோ. சிங்கராய அடிகளார் ஒழுங்குசெய்து வருகின்றுர்.

## தந்திக்கம்பி திருட்டு

அராலி, செவ்வாய்

வட்டுக்கோட்டை- அராலி ‘டெலிபோன்’ சேவை, துண்டிக்கப் பட்டுள்ளது. அராலி தெற்கு மாத்தனை என்னும் வயல் வெளியில் ஆறு தந்தி தூண்களுக் கிடையே யுள்ள டெலிபோன் கம்பிகள் இனந்தெரியாதவர்களால் துண்டிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இது இப் பகுதியில் நடைபெற்ற இரண்டாவதுதிருட்டாகும்.

---

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45 செய்திச்சுருள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம்.

---

வரதர் வெளியீடு
## 5-ம் வகுப்புக்கு

மூன்றும் தவணைக்காலத்தில் உபயோகிக்கத் தகுந்த சிறந்த மாதிரி வினாப் பத்திரங்கள். பாடத் திட்டம் முழுவதையும் அடக்கியுள்ளதால் நல்ல மீட்டற் பயிற்சிகளுமாம். பரீட்சையில் நல்ல தேர்ச்சி பெற மிக உதவியானவை.

சிறந்த அனுபவமிக்க ஆசிரியை
திருமதி
பத்மா சோமகாந்தன்
எழுதியவை.
புதிய பதிப்புகள்!

| | | |
|---|---|---|
| 1. தமிழ் | சதம் | 70 |
| 2. சூழல் | ,, | 70 |
| 3. கணிதம் | ,, | 70 |
| 4. ஆங்கிலம் | ,, | 70 |
| 5. சைவசமயம் | ,, | 70 |

தொகையாக வாங்குவோர்க்கு கழிவுண்டு.

ஆனந்தா
அச்சகம்—புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

---

$6\frac{1}{2}$ ஹோஸ்பவர் தொடக்கம் 20 ஹோஸ்பவர் வரையுமுள்ள
ஜோன்சன் அவுட்போட் மோட்டர் உதிரிப்பாகங்களும்
பேக்கின் P3 மரீன் இன்ஜின் உதிரிப்பாகங்களும்
எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.
மற்றும் கட்டிடங்களுக்குத் தேவையான சகலவிதமான சாமான்களும் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
# விஷ்ணுஹாட்வெயார்ஸ்ரோஸ்
57, யாழ்ப்பாணம் வீதி, (போன்: 34) வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசை திருப்பிய விமானப் பிரயாணிகளை விடுவிக்க

# கொமாண்டோ நிபந்தனைகளுக்கு சுவிஸ், மேற்கு ஜேர்மனி இணக்கம்

லண்டன், செப். 8

அரபுக் கொமாண்டோக்கள் திசை திருப்பிக் கொண்டு போய் வைத்துள்ள அமெரிக்க, சுவிஸ் விமானங்களின் எஞ்சியுள்ள பிரயாணிகளை விடுவிப்பதற்கு அவர்கள் கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளார்கள்.

இவர்கள் விடுத்த நிபந்தனைகளை மேற்கு ஜெர்மனியும், சுவிட்சர்லாந்து அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளன. பிரிட்டிஷ் பிரதமர் இது பற்றி ஆலோசிப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த அரபுக் கொமாண்டோக்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை அமெரிக்கப்பிரயாணிகள் விமானமொன்றையும் சுவிட்சர்லாந்து விமானமொன்றையும் துப்பாக்கி முனையில் ஜோர்டானுக்குள் திசை திருப்பி பாலைவனமொன்றில் இறக்கி வைத்துள்ளார்கள். இந்த விமானங்களில் இருந்த 300 பிரயாணிகளில் சுமார் 120 பேரை கொரில்லாக்கள் விடுதலை செய்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும் குழந்தைகளும் வயதுமுதிர்ந்தவர்களுமாவர். இந்தப் பிரயாணிகள் அம்மானுக்குப் போவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 180 பேர்களையும் விடுவிக்க கொமாண்டோக்கள் நிபந்தனை விதித்துள்ளனர். மேற்கு ஜெர்மன், சுவிட்சர்லாந்து இங்கிலாந்து இஸ்ரேல் போன்ற நாடுகளில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள அரபுக் கொரில்லாக்களை விடுதலை செய்தால் மாத்திரமே இவர்களை விடுதலை செய்ய முடியும் என்று கொமாண்டோக்கள் அறிவித்துள்ளனர்.

### மேற்கு ஜேர்மன் சுவிஸ் இணக்கம்

இதற்கிடையில் அரபுக் கொமாண்டோக்கள் விடுத்துள்ள நிபந்தனைகளை மேற்கு ஜெர்மனியும் சுவிட்சர்லாந்தும் ஏற்றுக் கொண்டு அங்கு காவலில் வைக்கப்பட்டுள்ள அரபுக் கொமாண்டோக்களை விடுவிக்க இணங்கியுள்ளன.

மேற்கு ஜெர்மனியில் விமானமொன்றின் மீது தாக்குதல் நடத்திய மூன்று கொமாண்டோக்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அது போலவே இஸ்ரேல் விமானமொன்றின் மீது தாக்குதல் நடத்திய இரு அரபுக் கொமாண்டோக்கள் சுவிட்சர்லாந்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

லண்டனில் காவலில் வைக்கப்பட்டுள்ள அரபுக் கொமாண்டோ இயக்கத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணை விடுவிப்பது பற்றி பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. அலெக்சாண்டர் ஹீத் அரபுக் கொமாண்டோ பிரதிநிதிகளுடன் ஆலோசனைகளை ஆரம்பித்துள்ளார்.

கொமாண்டோக்கள் நடத்தியுள்ள இந்த திசை திருப்பும் நடவடிக்கையை செல்வாக்குள்ள எகிப்திய பத்திரிகையான அல்அஹ்ரம் கண்டித்திருக்கின்றது. கொமாண்டோக்களுக்கு இந்த நடவடிக்கையினால் எந்த விதப் பயனும் ஏற்படப் போவதில்லையென்றும் பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கப்பெரும் விமானமொன்றை அரபுக் கொமாண்டோக்கள் எற்கனவே கடத்திச் சென்று தீயிட்டுக் கொளுத்தி விட்டார்கள் இந்த விமானத்தில் பிரயாணம் செய்த பிரயாணிகள் தாயகம் திரும்பும் மார்க்கத்தில் இன்று ரோம் வந்து சேர்ந்தார்கள்.

### சுரங்க விபத்தில் 34 பேர் பலி

ராவல்பிண்டி, செப். 8

மேற்குப் பாகிஸ்தானில் சுரங்கம் ஒன்று நேற்று இடிந்துவிழுந்ததில் 34 பேரளவில் கொல்லப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது. இதுவவரயும் 24 புதையுண்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மிகுதிப் புதையுண்ட சடலங்களை எடுப்பதற்குரிய தேடுதல் முயற்சி நடைபெறுகிறது.

---

குஜராத்தில் வெள்ளம்

### பலமக்கள் வீடிழந்து தவிக்கின்றனர்

அஹமதபாத், செப் 8

குஜராத் மாநிலத்தின் பல பகுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தாழ்ந்த பிரதேசத்தில் வெள்ளம் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். குஜராத் மாநிலத்தில் பரோடா, சூரத், சுரேந்திர நகர், பவான் நகர்கள் மிகவும் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகி உள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குஜராத் மாநில அரசு உதவிகள் வழங்குவதோடு, நிவாரண நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது.

---

### மைசூரில் பயிற்சி பெறுவார்

மாவிட்டபுரம், செவ்

யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவரான திரு இ. ...ஸ்ரீபதி கிராமகைத்தொழில் பயிற்சி பெறுவதற்காக இந்தியா செல்ல இருக்கிறார்.

இலங்கை காந்திசேவா சங்கத்தின் உதவியுடன் இந்திய காந்திசேவா சங்

லுசாக்கா மாநாடு

### கம்போடிய தூதுக்குழுக்கள் பற்றி இறுதிமுடிவுகள்

லுசாக்கா, செப். 8

சாம்பியாவிலுள்ள லுசாக்காவில் இன்று நடைபெறவிருக்கும் உச்சிமகாநாட்டிற்கு ஆயத்தம் செய்யும் முகமாக நேற்று நடுநிலைமை நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கூடிப்பேசினர்.

நடுநிலைமைநாடுகளின் உச்சிமகாநாட்டில் கலந்துகொள்வதற்காக கம்போடியாவிலிருந்து இரண்டு தூதுக்குழு சாம்பியா வந்துசேர்ந்துள்ளன.

இளவரசர் சிகானுக்குவை ஆதரிக்கும் ஒரு தூதுக்குழுவும் லோவ்நொல் அரசாங்கத்தின் தூதுக்குழுவும் சாம்பியா வந்துள்ளன.

நேற்று நடைபெற்ற நடுநிலைமை நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கூட்டத்தில் இக்குழுவில் யாரை ஏற்றுக்கொள்வது என்பது பற்றி எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை. இது பற்றிய விஷயம் உச்சிமகாநாட்டுக்கே விடப்பட்டுள்ளது.

சாம்பியாவிலுள்ள லுசாக்காவில் கூடும், நடுநிலைமை நாடுகளின் உச்சிமகாநாட்டில் கலந்துகொள்ள சாம்பியா வந்துள்ள இலங்கைப் பிரதமர் திருமதிஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி, சாம்பியா ஜனாதிபதி கவுண்டா ஆகியோர் நேற்று தனிப்பட்டமுறையில் சந்திந்துப்பேச்சு வார்த்தை நடத்தினர். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை.

---

### நிருபர்கள் கைது

நடுநிலைமை நாடுகளின் உச்சிமகாநாட்டைப் பார்வையிடவந்த இரண்டு பத்திரிகை நிருபர்களை சாம்பியா பொலிசார் நேற்றுக் கைதுசெய்தனர். சர்வதேச பத்திரிகையாளர் கழகத்தைச் சேர்ந்த நிருபரும், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நிருபருமே இவ்விருவருமாவர்.

---

### இதன் பெயர் தந்தியா?

யாழ்ப்பாணம், புதன்

அண்மையில் யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள ஒருவருக்கு நோர்வூட்டில் இருந்து தந்தி ஒன்று அனுப்பப்பட்டது அதில் நோர்வூட்டிலிருந்து ஒருவர் யாழ்ப்பாணம் வருவதாகவும் அவரைப் புகையிரதநிலையத்தில் சந்திக்குமாறும் கோரப்பட்டிருந்தது.

முதல்நாள் காலை அனுப்பப்பட்ட அத் தந்தி தந்தி அனுப்பியவர் யாழ் நகர் வந்த மறுநாள் பிற்பகல் இரண்டு மணிக்கே உரியவருக்கு கிடைத்தது.

அதேபோல் காலை ஹிக்கடுவையில் இருந்து எஸ். கந்தையா என்பவரால் மேற்படி வீட்டிலுள்ள திரு க. தவபாலனுக்கு அனுப்பப்பட்ட தந்தி மணிஓடர் மறுநாள் மாலையே விலாசத்தாரருக்கு கிடைத்ததாம். அதற்கிடையில் காசு அனுப்பியவர் எழுதிய கடிதம் விலாசத்தாரருக்குக் கிடைத்துவிட்டதாம்.

---

### 10 ரேட்டுக்கள் திருத்தப்படும்

பூநகரி, செவ்வாய்

கிளிநொச்சித் தொ... தி

## இந்திய இளம் பெண்கள் அரபுநாடுகளுக்கு ஏற்றுமதி?

### 20 வருடங்களாக நடைபெறுகிறதாம்

பம்பாய், செப் 8

கேரளப் பெண்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு கொடுமைக்குள்ளாவதாக செய்திகள் அடிபட்டு ஓயவில்லை, இன்னுமோர் பரபரப்பான செய்தி வெளி வந்துள்ளது. மாதந்தோறும் 15 பெண்கள் வீதம் அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் ஏலச்சந்தை கடந்த 20 வருடங்களாக நடைபெற்று வருகிறதென இப்பொழுது தெரிவிக்கப்படுகிறது.

இப்படி ஏற்றுமதி செய்யப்படும் பெரும்பாலான முஸ்லிம் பெண்களை துபாய், மஸ்கட், பாஹ்ரீன், குவாய் ஆகிய இடங்களில் விற்பதாகத் தெரிகிறது. பெரும்பாலும் ஆந்திரா, மைசூர், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 16 முதல் 18 வயதுடைய பெண்களை கங்காணிகள் மூலம் பெற்று காஜிகள் மூலம் அராபியர்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்படுகிறது. இவர்களுக்குரிய சர்வதேச பாஸ்போட் எடுப்பதற்கு ஆலோசகர்கள் உதவி புரிகின்றனர். திருமணம் செய்யப்பட்ட பெண்களை அவ்வராபியர் அழைத்துச் சென்று அராபியநாட்டுத் தனவந்தர்களுக்கு ரூபா 6,000 லிருந்து ரூபா 10,000 வரை விற்கிறார்கள். செல்வந்தர்களின் ஆசைக்குப் பலியாகி இளமை அழிந்ததும், இவர்கள் விபச்சார விடுதிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். அல்லது கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்படுகிறார்களாம்.

இவ்வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் கங்காணிகள், காஜிகள் பற்றிய விபரம் பொலிஸ் தஸ்தாவேஜில் இடம்பெற்றிருக்கிறது. இவ்வித காஜிகளில் இப்ராஹிம் காருஎன்பவர் 25கல்யாணங்களைச் செய்து கடந்த ஐந்து வருடத்தில் இந்தியாவிலிருந்து 500பெண்களைக்கூட்டிச் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இவ்வுண்மைகள் பற்றி சர்வதேசப் பொலிஸ் அலுவலகத் தஸ்தாவேஜுகளிலும் இடம் பெற்றுள்ளதாம். இதுபற்றி நுணுக்கமாக பரிசீலித்துள்ள ஜேம்ஸ் ஹாலெட்ஜ் என்பவர் எழுதியுள்ள "வெள்ளை அடிமை வியாபாரம்" என்ற நூலில் கூறுகிறார்.

இவ்விதமான பெண்கள் அராபியக் கணவர்களுடன் அராபிய நாடுகளுக்குப் போக பாஸ்போட்டுக்கு மனுச் செய்துகொண்டால் அப்பத்திரங்கள் துப்பறியும் பொலிசாருக்கு அனுப்புவதாகவும் பொலிசார் அப்பெண்களைத் தனியாகஅழைத்து, அரபு நாடுகளில் நடைபெறும் கொடுமைகளை எடுத்துச்சொல்லியும் கேட்காதபட்சத்தில் பெற்றோர்களை அழைத்துக் கூறுகிறார்களாம். பெரும்பாலும் இவர்களிடமிருந்து சாதாரணமாக' ஒரேவிதமான பதில்களே வருகின்றன என இந்தியபாஸ்போட் இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 'சுதந்திரக்கட்சியில் தான் வகுப்புவாதமில்லை'

### வடமராட்சியில் கட்சி அமைப்பாளர்

உடுப்பிட்டி. செவ்வாய்

"காலஞ்சென்ற பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த காலந்தொடக்கம் திருமதி சிறிமா பிரதமராக இருக்கும் காலம்வரை இலங்கைச் சரித்திரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நாட்டு மக்களிடையே நிலவும் பொருளாதார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய பிரச்னைகள் வெகு விரைவில் தீர்த்து வைக்கப்பட்டுவிடும். இலங்கையில் வகுப்புவாதமில்லாத ஒரேயொரு கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான்."

மேற்கண்டவாறுவடபிராந்... ரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளால்இன்றையசூழ்நிலையில் எமக்குப் பிரயோசனமில்லை. வகுப்புவாதக்கட்சிகளுக்கு நாட்டில் இனிமேல் இடமில்லை. எமது படித்த வாலிபர்களுக்கு மக்கள் அரசாங்கமே மதிப்புக்கொடுத்து அவர்களின் பிரச்னைகளைத் தீர்த்துவருகின்றது" என்று குறிப்பிட்டார்.

திரு. க. புலேந்திரலிங்கம் நன்றியுரை கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மயிலியதனைச் கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்!

தலைவர் திரு. சி. ஈஸ்வரலிங்கப் பெருமான் (கி. ச.

## இந்திய சஞ்சிகை இறக்குமதி

# வியாபார தில்லுமுல்லுகள் பற்றி அறிக்கை, விபரம் தாருங்கள்

### பாராட்டுக் கூட்டத்தில் வ. பொ. வின் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன் | விதேசி இலக்கியங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிக்கை, விபரம் தாருங்கள்

## பாராட்டுக் கூட்டத்தில் வ. பொ. வின் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

**இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதிலும், விற்பனை செய்வதிலும் இருந்துவரும் சிக்கல்கள் ஊழல்கள் பற்றிய விபரங்களையும், அவைகளை தீர்த்துக்கொள்வதற்கான வழிமுறைகளையும்பற்றி அறிக்கைகளைத் தயாரித்துதரும்படி சாகித்தியமண்டல உறுப்பினரான திரு. வ. பொன்னம்பலம் கேட்டுக்கொண்டார்.**

சாகித்திய மண்டல உறுப்பினராக திரு. வ. பொன்னம்பலம் நியமிக்கப்பட்டிருப்பதைப் பாராட்டுமுகமாக யாழ். இலக்கிய வட்டத்தின் சார்பில் மலாயா கபே மேல்மாடியில் திரு. செங்கைஆழியான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் பேசினார்.

இலக்கிய வட்டத்தின் சார்பில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள், புள்ளிவிபரங்களை அறிக்கை மூலமாகத் தந்தால் அதுபற்றி அரசாங்கத்துடன் பேசுவது சுலபமாகவிருக்குமென்றும் அரசாங்கத்துக்கு வழிகாட்டுவது பொதுமக்கள் கடமையென்றும் திரு. பொன்னம்பலம் குறிப்பிட்டார். நம் மத்தியிலே கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், நாட்டை நேசிப்பதிலும், மக்களை அணுகுவதிலும் இவை தடையாக இருக்கவேண்டியதில்லையென்றார் அவர்.

### தடை தமிழுக்கல்ல

தரம்குறைந்த இந்திய சஞ்சிகைகள், பத்திரிகைகளைத் தடைசெய்யவேண்டுமென்று கூறுவது தமிழை தடைசெய்வதற்காகவல்ல, இலக்கியத்தைத் தடைசெய்தற்காகவல்ல, அறிவைத் தடைசெய்வதற்காகவல்ல, இதில் நடைபெறும் கள்ளமார்க்கட்டுக்குத் தான் தடைவிதிக்கவேண்டும் என்கிறேம். அறிவுக்குதடை என்றால் அதனை நானே முன்னின்று எதிர்ப்பேன். இலங்கையிலிருந்து பத்திரிகை, சஞ்சிகைகளை இறக்குமதி செய்வதை இந்திய அரசாங்கம் என்ன அடிப்படையில் தடை விதித்திருக்கின்றதோ அந்த நல்ல உதாரணங்களை பின்பற்றி நாமும் இங்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று அவர் வற்புறுத்தினர்.

இந்தக் கருத்தை அவர் மேலும் விளக்கிப்பேசுகையில் தென்னிந்தியாவிலிருந்து மூன்றுந்தரமான கலைஞர்கள் இங்கு வரவழைக்கப்படுவதைத் தடைசெய்வது குறித்து முன்னர் எழுந்த சர்ச்சைகள் பற்றி குறிப்பிட்டார். அப்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக இன்று உள்ளூர் கலைஞர்கள் மதிக்கப்படுவதையும், போதிய வருவாய் பெற்று வருவதையும் குறித்த அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். கலைக்கோ, கலாசாரத்துக்கோ தடைவிதிப்பதல்ல நோக்கம். நம் கலைஞர்களுக்கு ஆதரவை பெருக்கவேண்டும், வருமானத்தை கூட்டவேண்டும். அதுபோலவே எழுத்தாளர்களுக்கும் உரிய மரியாதை ஏற்படவேண்டும் என்றார் திரு. பொன்னம்பலம்

### கூட்டுறவு பிரசுரம்

தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிடுவதற்கெனகூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தலாம்என்று அவர் யோசனை கூறினர். சமய நூல்களை வெளியிடுவதற்கான கூட்டுறவு ஸ்தாபனம் ஒன்று இருப்பது போல் வேறு நூல்களை வெளியிடுவதற்கெனவும் எழுத்தாளர்கள் இம்மாதிரி அமைப்புக்களை உருவாக்கிக் கொள்ளலாம் என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நமது பண்பாடு மரபுகள் தனித்துவமாக வளரவேண்டும் என்று குறிப்பிட்டார்.

### இலக்கியத்தின் வெற்றி

திரு செங்கை ஆழியன் ஆரம்பத்தில் உரைநிகழ்த்தியபோது, திரு. பொன்னம்பலத்தின் நியமனம் ஈழத்து இலக்கியஉலகுக்கு கிடைத்த வெற்றி என்றார்.

விதேசி இலக்கியங்கள் சுதேசி இலக்கியவளர்ச்சிக்குத் தடையாக இருந்து வந்துள்ளன என்றகருத்தை யாழ். இலக்கிய வட்டம் தெரிவித்து வந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்

### சூழ்நிலையும் நாமும்

திரு. பொன்னம்பலத்தைப் பாராட்டி இரசிகமணி திரு. கனகசெந்திநாதன் பேசுகையில் ஈழத்து இலக்கிய உலகில் புதிய சூழ்நிலையொன்று உருவாகியுள்ளது என்றும், இதனை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் எதிர்காலம் மிக மோசமாகிவிடக்கூடும் என்றும் குறிப்பிட்டார்

ஈழத்தில் இலக்கிய வளர்ச்சிபற்றி அவர் விளக்கிப் பேசுகையில், 1952-ம் ஆண்டில் பகீரதன் இலங்கைக்கு வந்தபொழுது இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கை பத்துவருடம் பின்தங்கியிருப்பதாகக் குறிப்பிட்டார் என்பதை நினைவு படுத்திய அவர், சொன்னதில் ஓர் உண்மை இருந்தது என்றும், அப்பொழுது இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள் என்று வெளிநாட்டு எழுத்தாளர்களிடம் காட்டுவதற்கு நூல் உருவில் இலக்கிய சிருஷ்டிகள் அதிகம் இருக்கவில்லையென்றும் குறிப்பிட்டார்.

கடந்த பதினைந்து ஆண்டுகளில் 53 சிறுகதைத்தொகுதிகளையும், 45 நாவல்களையும் சுமார் 75 இதரக் கதைத் தொகுப்புகள் 75 புராணபள்ளு போன்றசமய நூல்களையும் சுமார் 25கலைப் படைப்புக்களையும் இலங்கையில் வெளியிட்டிருக்கிறார்கள் என்றும் இது இந்தியாவிலும்பார்க்க மிகமுன்னேற்றமாகும் என்றும் அவர் சொன்னர்.

அவர் மேலும் பேசுகையில் இங்குதேவையில்லாத பத்திரிகைகள் தடை செய்யப்படும் அதே சமயம் நல்ல நூல்களுக்குத் தடையிருக்கக் கூடாது. இறக்குமதிக்கென்று ஒரு ஸ்தாபனத்தை அரசாங்கம் நிறுவி அதன்மூலம் பத்திரிகைகளைத் தருவிக்கலாம் தபாப் மூலம் தருவிப்பதில் பல சிக்கல்கள் ஏற்படலாம் என்று விளக்குகிறார்.

இலங்கையில் மேலும் நிறைய பத்திரிகைகள் தோன்ற வேண்டும் என்று சொன்ன அவர் இலக்கிய தரமான பத்திரிகைகளுக்கு அரசாங்கம் ஊக்கமளிக்க வேண்டும் என்றும் கோட்டுச்கொண்டார்.

திரு.வி. கந்தவனம்பேசும்போது தரமில்லாதபத்திரிகைகள் சஞ்சிகைகள் எங்கிருந்துவந்தாலும், அவைநம் நாட்டிலேயே உருவாளுலும் தடை விதிக்கப்பட வேண்டும் என்பதேநமது கருத்து என்றூர் திரு. பொன்னம்பலம் தமிழ் எழுத்தாளர்களின்நிலைஉணர்ந்தவர் அவர்களின் வளர்ச்சிக்கு அவர் உதவவேண்டும் என்றும் தெரிவித்தார்.

காரைஎஸ்.சுந்தரம்பிள்ளை நன்றி தெரிவித்தார்.

---

...மாணவரான திரு ... இ...ளிபதி கிராம கைத் தொழில் பயிற்சி பெறுவதற்காக இந்தியா செல்ல இருக்கிறார்.

இலங்கை காந்திசேவா சங்கத்தின் உதவியுடன் இந்திய காந்திசேவா சங்கத்தின் உபகார சம்பளத்தில் இந்தியா செல்லும் இவர் மைசூரிலுள்ள காந்திய கிராம கைத்தொழில் நிலையத்தில் துணிகளுக்கு சாயம்போடும் விதங்கள் பற்றி பயிற்சி பெறுவார்.

இவர் இரு வருடங்கள் அங்கு பயிற்சி பெற்றபின் திரும்புவார்.

---

...என்ன பேசினார்கள் என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை.

## 10 ரேட்டுக்கள் திருத்தப்படும்

பூநகரி, செவ்வாய்

கிளிநொச்சித் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரியின்முயற்சியினால் கிளிநொச்சித் தொகுதியில் உள்ள 10ரோட்டுக்களை நெடுஞ்சாலைத் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது.

இவைகள் திருத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

---

# எவ்வகை சஞ்சிகைகளை இறக்குமதி செய்யலாம்?

## இராமநாதன் கழகம் அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

'தென் இந்தியாவிலிருந்து வரும், மலிவுப்பதிப்பு துப்பறியும் கதை நூல்களை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும்" என்று கொடிகாமம் இராமநாதன் கழகம். தபால் மந்திரி திரு. செ. குமாரசூரியருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

கழகத் தலைவர் திரு. எஸ். எம். கமலநாதன், செயலாளர் திரு. பொ. சண்முகநாதன் ஆகியோர் அனுப்பியுள்ள மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

மலிவுப்பதிப்பு துப்பறியும் கதைகளால் தமிழ் மாணவர்கள் தவறான வழியில் செல்கின்றார்கள். வகுப்பு நேரங்களில்கூட பாடப்புத்தகங்களுக்குள் இந்த மலிவுப் பதிப்பு நூல்களை மறைத்து வைத்துப் படிக்கின்றனர். இந்தத் துப்பறியும் நூல்களால் இவர்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை.

தென் இந்திய தினசரிப் பத்திரிகைகளையும் தடைசெய்யவேண்டும். இப்பத்திரிகைகளால் அந்நாட்டுச் செய்திகளும், அந்நாட்டு விளம்பரங்களும் ஆபாசச் செய்திகளும், சினிமாச் செய்திகளுமே இடம்பெற்றுள்ளன. இவற்றினாலும் நம்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு எவ்வித பயனுமேற்படப்போவதில்லை. இப்பத்திரிகைகள் இந்நாட்டுக்கு வந்து சேரவே இரண்டு மூன்று தினங்கள் செல்கின்றன. அதன் பின்னரும் இவை கூடிய தொகைக்கு விற்பனைசெய்யப்படுகின்றன.

தென்னிந்தியாவிலிருந்து வெளிவரும், தரமற்ற சினிமா சஞ்சிகைகளையும் தடைசெய்யவேண்டும். இப்பொழுது நாளுக்கொரு சினிமா ஏடுகள் தென்னிந்தியாவிலிருந்து புதிதாக வெளிவருகின்றன. இவற்றை எல்லாம் வர்த்தக நோக்கம் கொண்டு இங்கு இறக்குமதி செய்கின்றார்கள். இதனாலும் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. தரமுள்ள நீண்டகாலமாக விற்பனை செய்யப்படும் சில சினிமா ஏடுகளை மட்டும் இறக்குமதி செய்ய அனுமதிக்கலாம் வார, மாத சிறுவர் சஞ்சிகைகளை தற்பொழுது தடைசெய்யக்கூடாது. தரமான சஞ்சிகைகள் இலங்கையில் வெளிவந்தபின்னர் இவற்றையும் தடைசெய்யலாம்.

---

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

---

...விலாசத்தாரருக்கு கிடைத்ததாம். அதற்கிடையில் காசு அனுப்பியவர் எழுதிய கடிதம் விலாசத்தாரருக்கு கிடைத்துவிட்டதாம்.

## 'பாடசாலை ஓர் ஆலயம்'

உரும்பராய், செவ்

நமது அறியாமையைப் போக்கி அறிவைத்தரும் இடம் பாடசாலை. நாம் ஓர் ஆலயத்துக்குச் செல்லும்போது தூய்மையாயும் பயபக்தியுடனும் செல்லுதல் போல பாடசாலைக்கு வரும்போது தூய்மையாகவும் பயபக்தியுடனுமே வருதல் வேண்டும் பாடசாலை ஓர் ஆலயத்துக்குச் சமனுகும் என உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையிலுள்ள ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலய முன்றலில் நடைபெற்ற கூட்டுப் பிரார்த்தனையில் உரையாற்றிய வித்தியாசாலையின் புதிய அதிபர் திரு கு. சபாரத்தினம் குறிப்பிட்டார்.

## இன்று சங்காபிஷேகம்

சித்தங்கேணி, புதன்

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவிலில் ஆவணி மூல தினமான இன்று பகல் 1008 சங்குகளால் அபிஷேகமும் நண்பகல் மகேஸ்வர பூசையும், இரவு சுவாமி வீதிவலம் வருதலும் இடம் பெறும். 'இராஜராஜ சோழன்' நாடகமும் மற்றும் இசை, கலை நிகழ்ச்சிகளும் இரவு நடைபெறும்.

## 37 வருடங்களின் பின் ஓய்வு

மாவிட்டபுரம், செவ்.

தையிட்டி சிவகுருநாத வித்தியாசாலை உதவி ஆசிரியராக 37 வருடங்களாகச் சேவையாற்றி வந்த திரு அ. இராசநாயகம் தமது 56வது வயதில் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் தமது பிறப்பிடமான வறுத்தலைவிளான் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் 26 வருடங்களாகக் கடமையாற்றியுள்ளார்.

சிறந்த சமூகத் தொண்டராக விளகும் இவர் தமது கிராம முன்னேற்றத்துக்காகவும் முன்னின்று உழைத்தவராவர்.

---

...டாட்டம் ஆகிய பிரச்னைகள் வெகு விரைவில் தீர்த்து வைக்கப்பட்டுவிடும். இலங்கையில் வகுப்புவாதமில்லாத ஒரேயொரு கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான்.''

மேற்கண்டவாறுவடபிராந்திய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளர் திரு. எம் துரைராஜா மயிலியதனைப் பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளையைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

உடுப்பிட்டிக் கிராமசபையின் 10-ம் வட்டார உறுப்பினர் திரு சி. ஈஸ்வரலிங்கப்பெருமான் இத்திறப்பு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''தமிழ...

திரு. க. புலேந்திரலிங்கம் நன்றியுரை கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மயிலியதனைச் கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

தலைவர் திரு. சி. ஈஸ்வரலிங்கப் பெருமான் (கி. ச. உறுப்பினர் உபதலைவர்கள் திரு. வே. பாலசிங்கம், திரு த. அருணகிரிராசா, காரியதரிசிகள்: திரு. க. புலேந்திரலிங்கம் திரு பா, முருகதாஸ், திரு. இ. தவராசா, தனாதிகாரி திரு. வெ. ஸ்ரீஸ்கந்தராசா.

நால்வரடங்கிய நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

தமிழ்நாட்டு சஞ்சிகைத்தடை:

# 'முதலில் மக்கள் கருத்தை அறிய வேண்டும்'

புத்தூர், செவ்வாய்

தமிழ்நாட்டுச் சஞ்சிகைகள், புத்தகங்கள் போன்றவற்றைத் தடை செய்வதாக இருந்தால் எவை எவை தடைசெய்யப்படல் வேண்டுமென மக்கள் அபிப்பிராயம் பெற்றபின்பே தடைசெய்யப்படல்வேண்டும்.

இவ்வாறுபுத்தூர் அற்புதாலயா கலாமன்றத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டத்தில் மன்றச்செயலாளர் திரு. இ. மயில்வாகனம் பேசும்போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில். தமிழ்நாட்டுச்சஞ்சிகைகளை முற்றாகத் தடைசெய்வதாயின் அது தமிழ் மக்களுக்குச் செய்யும் ஒரு துரோகமாகும். உண்மையிலேயே அங்கிருந்து எத்தனையோ தேவையற்றனவும் வெளிவருகின்றனதான் குறிப்பாக தனியே சினிமாப் பிரசார செய்திகளைத்தாங்கி எத்தனையோபுத்தகங்கள் மாதாமாதம் வந்து குவிகின்றன. அதற்காக சினிமாத்தொழில் சம்பந்தப்பட்ட நுட்பங்களை தாங்கி வருவனவற்றையும் தடைசெய்ய வேண்டுமா? அது நமது நாட்டின் சினிமாப் படத்தயாரிப்பின் முன்னேற்றத்தைத்தடை செய்வதாகும். மேலும் நம்மவர்கள் மத்தியிலே இப்போது தான் வளர்ச்சி ஆரம்பமாகியுள்ளது. அவை தரமானவையாகவும் உள்ளது. தமிழ் நாட்டிலிருந்து உதவாக்கரை நாவல்கள்தான் அதிகம் வருகின்றன. அவை நிச்சயம் தடைசெய்யப்படவேண்டும், வியாபார நோக்கத்துக்காக எழுதப்படும் நாவல்களையே விட்டு அங்குள்ள அறிஞர்களும் மேதாவிகளும் எழுதிய நாவல்களையே இறக்குமதி செய்யப்படவேண்டும் என்றூர்.

இக்கூட்டம் திரு. மு. அற்புதலிங்கம் தலைமையில் நடைபெற்றது: இவ்வருடத்துக்குரிய புதுநிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: தா. கந்தையா, உபதலைவர்: வே. செல்லமுத்து, செயலாளர்: இ. மயில்வாகனம், உபசெயலாளர்: நா. சிவலிங்கம், பொருளாளர்: க. செல்லத்துரை. போஷகர்கள்: மு. அற்புதலிங்கம், நா. றிச்சாட்.

21 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## யந்திரம் திருட்டு

மாவிட்டபுரம், செவ்.

தோட்டத்தில் இருந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை இனந்தெரியாதவர்கள்திருடிவிட்டனராம்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த எஸ். சீவரத்தினம் என்பவர் தமது தோட்டத்தில் இரவு நேரத்தில் இருந்த 1500 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் யந்திரம் இனந்தெரியாதவர்களால் களவாடப்பட்டுள்ளது என பொலிசில் புகார்செய்துள்ளார்.

இதையடுத்து பொலிசார் தீவிரவிசாரணையில் ஈடுபட்டபோதும் இதுவரை பொருளோஅல்லது திருடர்களோ கைதுசெய்யப்படவில்லை,

பொலிஸ் தொடர்ந்தும் விசாரணையில் ஈடுபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உள்ளத்துக்குக் கல்வி புகட்டுவதுதான் மனிதாபிமானச் சங்கங்களின் உரிய அலுவலாகும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 23-ந் திகதி (9-9-70)


## உருளைக்கிழங்கு

யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தியைப் பெருக்குவது பற்றி உதவிக் காணி அமைச்சரின் தலைமையில் நடைபெற்றுள்ள விசாரணையால் நல்ல பலன் சீக்கிரத்தில் ஏற்படுமென்று கமக்காரர் மட்டுமன்றி பொதுமக்களும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்

உருளைக்கிழங்கு ஒரு முக்கியமான உணவுப்பொருள். உள்நாட்டிலேயே இந்த உணவுப்பொருளை உற்பத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான கிழங்கைத் தடுத்துவிட்டனர். சென்ற சில வருடங்களில் உள்நாட்டிலே கிழங்கு ஓரளவு உற்பத்தி பெருகியிருப்பினும், நாட்டில் கிழங்குக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு, கிழங்கு விலையும் மிகவும் உயர்ந்துள்ளது. எளிய குடும்பங்கள் பலவும் கிழங்கு வாங்கி சாப்பிடமுடியாதபடி அவ்வளவு விலை.

உருளைக்கிழங்கு உற்பத்தியில் உள்ள கஷ்டநஷ்டங்களை நன்கு ஆராய்ந்து அவற்றை நீக்கி, அதன் உற்பத்தியைப் பெருக்கி, நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்வதோடு உருளைக் கிழங்கை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதுதான் தமது குறிக்கோளென்கிறார் உதவி அமைச்சர். இலட்சியம் மேலானதுதான். ஆனால் அதேசமயம் இங்கு பொதுமக்களுக்கு இந்த முக்கிய உணவுப் பொருள் நியாயமான விலைக்குத் தட்டின்றிக் கிடைக்கவும் ஆவனசெய்ய வேண்டியதவசியம்.

விசாரணைக் குழுவிடம் சமாஜ செயலாளர் அளித்த சாட்சியத்தில், விதை உருளைக்கிழங்குக்கு அதிக தட்டுப்பாடு ஏற்பட்டதாகத் தெரிவித்தார். ஆனால் அதே சமயம் தெற்கே 38 தொன் விதை வெங்காயம் மேலதிகமாக இருந்ததாம். அதை அந்தர் 31 ரூபாய் வீதம் ஒரு வர்த்தகருக்கு விற்ற [illegible] பின், உற்பத்தி பெருகுவதுடன் பொதுமக்களுக்கும் கிழங்கு குறைந்தவிலைக்கு தாராளமாகக் கிடைக்கக் கூடியதாக இருந்திருக்கும். இந் விசாரணையின் பயனாக வெளியான இத் தகவல்கள் இனி இவ்வித தவறு நடவாமல் தடுக்கவும், உள்நாட்டில் கிழங்கு உற்பத்தியாளரிடையே பயனுள்ள முறையில் அதிக ஒத்துழைப்பு ஏற்படவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்வரென்றே நம்புவோம்.

யாழ்ப்பாணத்தில் கிழங்கு பயிரிடக்கூடிய நிலங்கள் மேலும் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் வரை உள்ளதாகவும் அவற்றிலுள்ள பாறைகளை அகற்றி காணிகளைப் பதம் செய்தால் அங்கு கிழங்கை அதிகமாக உற்பத்தி செய்யலாமென்றார் யாழ். அரசாங்க அதிபரான சபாரத்தினம் அவர்கள். அந்த மண் மிக வளமுள்ளது. பாறைகளை வெடிவைத்து அகற்ற செலவு ஆகும்தான். என்றாலும் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய அவசியத்தைக் கருதும்போது இதற்காகும் செலவு அதிகமென்றோ, வீணென்றோ யாரும் சொல்லமுடியாது. நல்ல வளமுள்ள நிலத்தில் ஒரு சிறிதைத்தானும் இக்காலத்தில்பயன்படுத்தாமல் விடுவது நாட்டுக்குப் பலவிதங்களிலும் நஷ்டமென்பதை விளக்கத் தேவையில்லை

கிழங்கு விவசாயிகள் பலர் இவ்விசாரணைக்குழுவிடம் வேலும் பல குறைகளைத் தெரிவித்தனர்.

இவற்றையெல்லாம் இக்குழுவினர் ஆராய்ந்து அவற்றைக்கூடிய சீக்கிரத்தில் நீக்கி, உற்பத்தியைப் பெருக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பரென்று நம்புகிறோம். உதவி அமைச்சர் திரு. நவரத்தின அவர்களே இக்குழுவின் தலைவராக இருப்பதால், குறைகளை நீக்கி பொதுமக்களுக்கு அது இனி கூடிய சீக்கிரத் [illegible]

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# கைத்தொழில் அபிவிருத்திக்கு சில யோசனைகள்

இலங்கையின் வடபகுதியில் பூநகரியில் 'பெற்றோல்' வளம் நிறைய உண்டு என ஓர் ஆராய்ச்சியாளர் கூறியதாக சமீபத்தில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது. இதற்கு முன்பும் 'பிரான்ஸ்' தேசத்திலிருந்துவந்த பூகர்ப்ப சாஸ்திர வல்லுநர்கள் நில அகழ்வை மற்றும் பரிசோதனைகளின்பின் 'பெற்றோல்' எனப்படும் மண்ணெண்ணெய் இங்கு அநேகமாக இருக்கவேண்டும் என்ற முடிவிற்கு வந்ததும் தெரிந்தசெய்தி. எனினும் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னைய அரசாங்கம் எடுக்கவில்லை. ஒரு காரணம்: பெற்றோல் இப்பகுதியில் பூமிக்கு அடியில் இருப்பினும் அதைகொணர்ந்து சுத்திகரித்து எரி பொருளாக்குவதற்கு பாரிய யந்திர சாதனங்கள், பொலியியலாளர் பெரும் மூலதனம் ஆகியன தேவைப்படும். இதைத்தொழில்நுட்பம்; கடன் திட்டத்தில் நிதி உதவி ஆகியன அளிக்கும் நாடுகளின் உதவிகளுடன் தொழிற்சாலையை அமைத்தால் 'குவெல்ட்' போன்ற சிறிய விஸ்தீரணமுள்ள நாடு செல்வம் கொழிக்கும் குபேர நாடாகமாறியது போல எங்கள் நாடும் வருங்காலத்தில் மாறலாம். வேலையற்ற இளைஞர்கட்கும் தொழிலாளர்கட்கும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கவும் வழிகிட்டும். இவ்வளவும் கூறப்பட்டவைபுதிதாக நிறுவப்படும்தொழிற்சாலையைப் பற்றியதாகும். இத்தகைய தொழிற்சாலையை ஏறுவெல உருக்குத்தொழிற்சாலை; துல்ஹிரியாவில் உள்ள மின்நெசவாலை; களனி 'டயர்' தொழிற்சாலை ஆகியவற்றுடன் ஒப்பிடலாம்.

இரண்டாவதாக ஏற்கனவே உள்ள தொழிற்சாலையை விஸ்தரிப்பதாகும். காங்கேசன்துறையில் உள்ள சிமெந்துத்தொழிற்சாலையைப் புத்தளம், காலி ஆகிய இடங்களுக்கு விஸ்தரித்ததுபோல் இலாபகரமாக இயங்கும் ஒரு நிறுவனத்தை உதாரணமாக நாத்தாண்டியாவில் இருக்கின்ற கண்ணாடித்தொழிற்சாலையை வடபகுதியிலிருக்கும் வல்லிபுரக்கோவிலைச் சேர்ந்த இடத்திற்கும் விஸ்தரிக்கலாம் அங்குள்ள மணற்பாங்கான பூமி அத்தகைய தொழிற்சாலைக்கு மிகவும் ஏற்றதென நிபுணர்கள் சிபாரிசு செய்திருக்கின்றார்கள் என்பது பலருக்கும் [illegible]

யில் நாளாந்த பாவனைக்குரிய உபபொருட்களை உற்பத்தி செய்யக்கூடியதாகவும் வேறு தேவையான மாற்றங்களையும் செய்தல் வேண்டும், இத்தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருளாகிய கடல் நீரிலிருந்து பளீச்சிங் பவுடர், குளோறீன் வாயு ஹைட்ரோ குளோறிக் அமிலம் சவர்க்காரம், மற்றும் விவசாயத்திற்காகிய இரசாயனப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகள் இப்படிப் பலஉபயோகமான பொருட்கள் தயாரிக்கலாம். ஆயினும் இதற்கான தொழில்நுட்ப அறிவைச் சிறந்த முறையில் செயல்படுத்தும் தொழில்நுட்ப வல்லுனர்களின் ஊக்கம் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு ஆகியனவும் அவசியமே.

மேற்கூறிய மூன்று படித்தரங்களில் எப்படியான நிலையில் தொழிற்சாலைகளை அமைக்கலாமென சுருக்கமான முறையில் கூறப்பட்டிருக்கிறது இவைகளை கைத்தொழில் விஞ்ஞான அமைச்சு நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு திட்டங்களைத் தயாரிக்கும் பொருளாதார விற்பனர்கள் ஆக்கபூர்வமான யோசனைகளை அமைச்சுக்கு வழங்கலாம். அத்துடன் மேற்கூறப்பட்ட இடங்களில் அவைகளை நிறுவச்செய்ய வேண்டியதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் அவ்வத் தொகுதிகளின் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் கடமையாகும்.

க. குருநாதன்,
ஸ்ரேசன் ரோட்,
உரும்பராய்.

# இரட்டை வேடமா?

இலங்கை சமஷ்டிக்கட்சி (இலங்கைத்தமிழரசுக்கட்சி) தனது உண்மையான பெயரை முடிவாகத் தீர்மானிக்க வேண்டும். பெடரல் கட்சி என்பதை தமிழில் மொழி பெயர்த்தால் சமஷ்டிக்கட்சி என்றே சொல்ல வேண்டும். ஆனால் அவர்கள் சமஷ்டிக்கட்சி என்பதை 'தமிழ் அரசுக்கட்சி' என மொழி பெயர்த்துள்ளார்கள். 'தமிழரசுக்கட்சி' என்பதன் பொருள் தமிழ் அரசாங்கக்கட்சி அல்லது தமிழர் தங்களைத் தாங்களே ஆளும் கட்சி என்பதாகும்.

சமஷ்டி அரசியல் திட்டத்தில் இலங்கையில் தமிழர் நலம் பேணவேண்டுமென்று ஆங்கிலத்தில் கூறுவதற்கும் தன்னாட்சி (தமிழ் அரசு) என்று இவர்கள் தமிழ்மக்கள் முன்வைத்த கோஷத்திற்கும் முற்றிலும் வேறுபாடுண்டு. இது இரட்டை வேஷமா அல்லது ஏமாற்றுவித்தையா?

இந்த அரசாங்கம் தானாகவே தமிழ்பேசும் இயக்குநர் ஒருவரை நியமித்துள்ளது. நீங்கள் மேலதிகமாக தமிழர் ஒருவரை நியமிக்கும்படி கேட்கிறீர்கள். எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தில் குற்றம்காண்பதுதான் சமஷ்டிக்கட்சியின் நோக்கமாகவிருக்கலாம். திரு இரத்தினம் எந்தத்தமிழரையும் விரும்பவில்லை மாறாக 'தமிழரசுத் தமிழரை நியமிக்க வேண்டுமெனவே விரும்புகிறோம் என்று கூறலாம் உண்மையென்னவென்றால் முற்போக்குவாதியாக அல்லது இடதுசாரியாக உள்ள ஒரு தமிழரையோ, முஸ்லிமையோ, சிங்களவரையோ அல்லது வேறு சமூகத்தவரையோ எதிர்ப்பதுதான் சமஷ்டிக்கட்சியின் வேலையாகும்.

திரு கா பொ இரத்தினம் போல நானும் இலங்கைத் தமிழன். 1962-ம் ஆண்டு கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் வெள்ளவத்தை தெற்கு வட்டாரத்தில் போட்டியிட்ட ஒரே தமிழனாக நான் இருந்தபொழுதிலும் இவரும் சமஷ்டிக் கட்சியினரும் ஏன் என்னை [illegible]ர்த்தார்கள்( இவர்கள் மேலும் எனக்குவாக்களிக்கவேண்டாமென்றும் ஐ தே கட்சிவேட்பாளருக்கு வாக்களிக்குமாறும் இவ்வட்டாரத்திலுள்ள தமிழ்வாக்காளர்களை [illegible]

சென்னை

தமிழரசுக்கட்சி

தமிழ்நாட்டில் தமிழரசுக் கட்சியின் பிரபல தலைவர் தி[illegible] ம. பொ. சிவஞான கிராமணியார் (எம். எல் ஏ) இந்தியாவிலுள்ள தமிழ் பேசா[illegible] ஏமாற்[illegible] இ[illegible]ாதவர் அவரது கட்சி [illegible]

சபாஷ்இலங்கைசபாஷ்! இலங்கை கால்பந்து கோஷ்டிக்கும் சென்னை, மைசூர் கேரளா கோஷ்டிகளுக்கும் கொழும்பு சுகததாசா ஸ்டேடியத்தில் இப்போது நடைபெற்றுவரும் பந்தயங்களில் இலங்கை வெற்றிக்குமேல் வெற்றி பெற்று வருகிறது. முதல் ரவுண்டில் விளையாடிய 3 பந்தயங்களிலும் இலங்கைக்கே வெற்றி.

சென்ற வருட சாம்பியன்களான மைசூர் வீரர்களையும் இலங்கை தோற்கடித்துள்ளது. பெரிய வெற்றி ஸ்டேடியத்தில் தாங்கமுடியாத கூட்டம். இந்தப் பந்தயங்களைக் காண பொதுமக்கள் மிக ஆவலுடன் திரண்டு வருகின்றனர். மிகவேகமாகவும் குசியாகவும்இருப்பதால் கால்பந்து ரஸிகர்களுக்கு இது நல்ல விருந்து இதற்கு ஒழுங்கு செய்த எப். ஏ என்ற இலங்கை கால்பந்து சங்கத்துக்கு நல்ல வருமானம்.

விளையாட்டு மிகவேகமாகவும் உற்சாகமாகவும் நடப்பதால், வீரர்கள் பலர் அடிக்கடி விழுகிறார்கள். ஒரு வீரர் ஆடுகையில் காயம் பட்டுவிட்டது. அவரை மற்ற சகாக்களே தூக்கிச் செல்லவேண்டியதாயிற்று அம்புலன்ஸ் ஏற்பாடு இல்லாதது பெரிய குறை. இக்குறையை இரண்டாவது ரவுண்டிலாவது நீக்கவேண்டும்.

தமிழகத்தில் கிராமங்களிலே திரௌபதி அம்மன் கோயில்களில் தீமிதியல் நடக்கும். அல்லாப்பண்டிகை என்று இந்துக்களும் பல நாள் விரதமிருந்து, கடைசி நாளன்று தீமிதியல் செய்வதை தஞ்சாவூர் கிராமங்களில் பார்த்திருக்கிறேன் இலங்கையிலே கதிர்காமம் முதலிய இடங்களில் நடக்கும் தீமிதியலை 'வேடிக்கை' பார்க்கவருடாவருடம் ஏராளமான கூட்டம் கூடுகிறது.

இவ்விதம் தீமிதியல் செய்வதில் ஆத்மீகசக்தி எதுவுமில்லையென்றும், நெருப்பிலிருந்து காலை 'சட்சட' டென்று எடுத்து நடந்தால் காலில் புண்படாதென்றும் கொழும்பு வைத்தியக் கல்லூரி நூற்றாண்டு விழாவில் தீமிதியல் செய்துகாட்டினர் இதில் பல வைத்திய மாணவர்கள்கலந்துகொண்டனர். யாரோ ஒருவரை சாராயம் குடி[illegible]துவிட்டு, தீயில் நடக்கச் செய்தனராம்.

பல வருடங்களுக்கு முன்பாக அட்டனிலிருந்து ஒரு பாதிரியார் தம்மாலும் இப்படிச் செய்யமுடியுமென்று காட்ட, கதிர்காமம் சென்றார். அவர் தீயில் இறங்கி நடந்ததும் கால் சுட்டு புண்ணாகி, கொப்புளங்கள் ஏற் [illegible]

# ஜயாரன் எழுதுவது:

விரதத்தையும், பிரார்த்தனையையும் இழிவுசெய்யும் முறையில் இவ்விதம் வைத்திய மாணவர்களை ஈடுபடுத்தியது விரும்பத்தக்கதல்ல.

0 0 0

''நல்லூர்க் கந்தன் - திருவருட் தேன்மலர்கள்'' என்ற தலைப்புடனே மெய்கண்டான் ஸ்தாபனத்தார், வெளியிட்டுள்ள அழகும் மணமும் கூடியு ஒரு தெய்வீக மலரைக் கண்டேன், மேலட்டையிலே வடிவேல் முருகன் மயிலுடனே ''அஞ்சேல்'' என்ற அபயசரத்துடன் உள்ளம் கவரச் காட்சி அளிக்கின்றார்.

''நம்பும் அடியவர் துன்பம் துடைத்திடும் ஞானக்குமரகுரு - தம் என்பும் உருக நினைப்பவர் உள்வண் இன்பக் கருணையுரு''

''விண்ணை யாளவும் மலையெனத் தொல்லைகள் மேவி எதிர்த்திடினும், - அவன் திண்ணிய நாமத்தைச் சிந்தையில் ஊன்றிச் சிரித்திடத் தூள்படுமே'' என்பன போன்ற பல பாடல்கள் பஜனைக்கேற்ற முறையில் தெய்வநம்பிக்கையால் ஏற்படும் நன்மைகளை உணர்ச்சியுடன் இந்தப் பயனுள்ள நூலில் அறிவுறுத்துகின்றன. திருவிழாக்காலத்திலே இவ்வித ஞானதானத்தைச் செய்வது நல்ல புண்ணியம்,

முருகன் தமிழருக்கு மட்டும் ஏகபோகமல்ல, கதிர்காமம் முதலிய ஊர்களில் சிங்களவர்கள் பயபக்தியுடன் வந்து உணர்ச்சியுடன் வழிபடுவதை பார்க்கின்றோம்அவர்களுக்கு முருகனைப் பற்றி எவ்வித பாடலும் தெரியாது. அதனால் 'அப்பர்' பாடல்களுக்கு காவடி ஆட்டம் ஆடுகின்றனர் முருகபக்தி அதிகமுள்ள அவர்களுக்கு முருகனைப்பற்றிய பஜனைப் பாடல்களையும் சிங்களத்தில் வெளியிட்டு வழங்குவது பல விதங்களிலும் நன்மையாகும். அதுமட்டுமல்ல கந்தபுராணமும் கூட சிங்களத்தில் மொழி பெயர்த்துக் கொடுக்கவேண்டும். முருகனின் பேரருளால் இலங்கையில் இரு சமூகத்தவர்களுக்கும் நல்லுறவு ஏற்படவும் இது வழி செய்யுமல்லவா? இந்தப் புண்ணியம் யாருக்குக் கிடைக்கப்போகிறதோ?

0 0 0

பொன்னு மெய்ப்
பொருளுந் தருவானைப்
போகமும் திருவும்
புணர்ப்பானைப்
பின்னை யென் பிழையைப்
பொறுப்பானைப்
பிழை யெல்லாந்
தவிரப் பணிப்பானை
இன்ன தன்மைய
னென்றறி யொண்ணா
எம்மானை யெளி வந்த
பிரானை,
அன்னம் வைகும்
வயற் பழனத்தணி
ஆரூரானை மறக்கலுமாமே

— சுந்தரமூர்த்தி நாயனார்

அராலி தெற்கில்

## சுமார் ரூ.5 ஆயிரம் நகை; சேலைகள் திருட்டு

அராலி, செவ்.

அராலி தெற்கைச்சேர்ந்த வேலாயுதர் சுப்பிரமணியத்தின் வீட்டினுள் சுமார் 5000 ரூபா பெறுமதியான தங்க நகைகள் நள்ளிரவில் திருடப்பட்டுள்ளது,

22 பவுண் நிறையுள்ள தாலிக்கொடி, 6 பவுண் சங்கிலி, 6 பவுண் காப்பு உட்படப் பல தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது. விலையுயர்ந்த பட்டுச் சேலைகளும் திருடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

சேலைகளும் தங் நகைகளும் வைக்கப்பட்டிருந்த பெட்டி அருகிலுள்ள கோவில் கிணற்றில் வீசப்பட்டிருந்தது.

சங்கானைப் பொலிசார் இத்திருட்டு சம்பந்தமாக தீவிர விசாரணை செய்து வருகின்றார்கள்.

## ஐக்கிய உள்ளூராட்சி சேவை ஔவசியர்கள் தீர்மானம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

லிக்கிறைக்குக்கு அதிக நட்டுப்பாடு ஏற்பட்டதாகத் தெரிவித்தார். ஆனால் அதே சமயம் தெற்கே 38 தொன் விதை வெங்காயம் மேலதிமாக இருந்ததாம். அதை அந்தர் 31 ரூபாய் வீதம் ஒரு வர்த்தகருக்கு விற்றதாயும் அதைப் பத்திரிகையில் விளம்பரம்செய்து கூடிய லாபம் பெற்றதாகவும் உதவி அமைச்சர் அளித்த பதில், இவ்விஷயத்தில் தெற்குக்கும் வடக்குக்கும் எவ்வித தொடர்போ ஒத்துழைப்போ இல்லை என்பதைக் காட்டுகின்றது. இருபகுதிகளுக்கும் அதிக ஒத்துழைப்பு இருந்திருப்பின் பல இடர்ப்பாடுகளையும் எடுப்பரென்று நம்புகிறோம். உதவி அமைச்சர் திரு. நவரத்தினு அவர்களே இக்குழுவின் தலைவராக இருப்பதால், குறைகளை நீக்கி பொதுமக்களுக்கு அது இனி கூடிய சீக்கிரத்தில் தாராளமாகக்கிடைக்கக்கூடியதாக இருக்குமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல. இறக்குமதித் தடையால் உள்நாட்டு உற்பத்தியாளருக்கு நல்ல பாதுகாப்பு இருப்பதால் விவசாயிகளும் இதில் அதிக ஊக்கம் காட்டினுல் அதிக நயம் கிடைக்கவும் வாய்ப்புண்டு.

# வேலணைச் செய்திகள்

— நமது நிருபர் க. அம்பிகாபதி —

## பாடசாலை வளர்ச்சி பற்றி எம். பி

வேலணை, செவ்வாய்

திருப்தியான கல்வி அறிவை பிள்ளைகள் பெற வேண்டுமாயின்பெற்றோரும் ஆசிரியர்களும் ஒன்று கூடி குறைகளை ஆராய்தல் வேண்டும். அரசாங்கத்தையே சகலதுக்கும் நம்பியிராமல் பெற்றோர்கள் பாடசாலைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். என வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய தீவுப்பகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கூறினுர்.

அதிபர் திரு. எஸ். அரியரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்கச்செயலாளர் திரு பொ கேதாரநாதன் பேசுகையில், தீவுப்பகுதியில் உயர்கல்விக்கு ஏதுவாக இருக்கும் கல்லூரி இது ஒன்றேயாகுமெனவும் பூரணமற்றதாக உள்ளஇக்கல்லூரியின் தேவையை நிறைசெய்ய ஆக்க பூர்வமாகச் செயல்பட சபையோரின் ஒத்துழைப்பு மிக அவசியம் எனவும் கூறினுர். வேறுபலரும் பேசினர்.

## ப நோ. கூ. சங்கத்தை திருத்தவேண்டும்

வேலணைக் கிராமமக்கள் ஒரே காலத்தில் ஒருமித்து விவசாயச் செய்கையில் ஈடுபடவேண்டும் அப்படி ஈடுபடுவதன் மூலம்தான் அபிவிருத்திகாண இடமுண்டு விவசாயிகளுக்கு விவசாயம் செய்யக் கடன் விதை நெல் போன்றவை காலதாமதமின்றிக் காலத்துக்குக்காலம் கிடைக்கக்கூடியதாக பயிர்ச் செய்கைக்குழுக்களும், கூட்டுறவுச்சங்கங்களும் வழிசெய்து கொடுக்கவேண்டும் என்றிவ்வாறு வேலணையில் நடைபெற்ற வேலணை கிழக்கு பயிர்ச்செய்கைக்குழு விசேட கூட்டத்தில் உரை நிகழ்த்திய திரு. கா. பொ. இரத்தினம் எம். பி கூறினுர்.

வேலணைக்கிராமசபைத் தலைவர் திரு. சதாசிவம் பேசுகையில் ''பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்பொழுது இருக்கும் நிலையில் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டியகடனை அரசாங்கத்திடமிருந்து பெறமுடியாதிருப்பதால் சங்கத்தைச் சீர்திருத்தி அமைத்தால் தான் சங்கமூலம் விவசாயிகள் பலனடையமுடியும்'' என்றுர் திரு. ஐயாத்துரையும் வேறு பலரும் உரை நிகழ்த்தினர்.

## வெள்ளிவிழா சபை

வேலணை மத்திய மகாவித்தியாலய 25 வருட பூர்த்தி வெள்ளிவிழா கொண்டாடும் பெருட்டு விசேடசபை தெரிவு செய்யப்பட்டது.

போஷகர் தீவுப்பகுதி ஆ. ம. உறுப்பினர் திரு. கா பொ. இரத்தினம், தலைவர்: திரு. எஸ். அரியரெத்தினம் (அதிபர் ம.ம வி), உபதலைவர்: திரு. ஈ. மாணிக்கம் ஜே.பி, காரியதரிசி: திரு. பொ. கேதாரநாதன் இணைக்காரியதரிசிகள்; திருவாளர்கள் பொ. பொன்னுச்சாமி. ச. விசுவலிங்கம், பொருளாளர்: திரு வா. அருணகிரி ஜே பி, உபபொருளாளர் திரு. அ. நமசிவாயம், மற்றும் 13 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இடமாற்றம்

இதுவரை காலமும் வேலணை கிராமசபைக் கட்டிடத்தில் இயங்கிய கிராம சபை ஆயுள்வேத வைத்தியசாலை நோயாளிகளின் வசதிக்கேற்றவாறு தனியான கட்டிடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

## கோரிக்கை நிறைவேறியது

வேலணை 7ம், 1ம், வட்டாரங்களில் தபால் பெட்டி நிறுவித்தருமாறு மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து இருதபால் பெட்டிகள் நிறுவப்படவுள்ளதாகத் தெரிகிறது.

## எம.பி யிடம் கோரிக்கை

வேலணை வங்களாவடியிலிருந்து மண்கும்பான் வரை செல்லும் வீதி திருத்தம் செய்யப்பட் வேண்டிய அவசியம் பற்றி புமிழரசுக்கட்சியின் வேலணைகிழக்குவாலிப முன்னணிச் செயலாளர் திரு.க. அம்பிகாபதி திரு. கா. பொ. இரத்தினம் எம், பிககு அறிவித்துள்ளார்.

## ஆலோசனைக் கூட்டம்

கிராமசபைத் தேர்தல்களில் தமிழரசுக் கட்சி சார்பாக வேட்பாளர்களை நிறுத்துவது சம்பந்தமாக ஆராயும் பொருட்டு, தமிழரசு வாலிப முன்னணிகளின் ஆலோசனைக் கூட்டமொன்றை அண்மையில் தீவுப்பகுதி எம்.பி. திரு கா பொ. இரத்தினம் கூட்டினுர். வாலிபமுன்னணிகளுக்கிடையே போட்டி மனப்பான்மை தவிர்க்கப்பட வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

---

கும் வல்லிபுரக்கோவிலைச் சேர்ந்த இடத்திற்கும் விஸ்தரிக்கலாம் அங்குள்ள மணற்பாங்கான பூமி அத்தகைய தொழிற்சாலைக்கு மிகவும் ஏற்றதென நிபுணர்கள் சிபாரிசு செய்திருக்கின்றுர்கள் என்பது பலருக்கும் தெரிந்திருக்கும்.

அடுத்ததாக இப்பொழுது இயங்கிக்கொண்டிருக்கும் தொழிற்சாலையைச் சீரமைப்பதும் உபபொருட்களை உற்பத்திசெய்யத்தக்கதாக மேலும் விஸ்தரிப்பதும் ஆகும். எடுத்துக்காட்டாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையைக் கூறலாம். ஏனெனில் சிலவருடங்கட்கு முன் அந்நிறுவனம் போதிய இலாபத்தைத் தராததால் மூடவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தது, இதற்கு நிர்வாகத் திறமையின்மையோ அன்றி வேறு காரணமிருந்தால் அதை அறிந்து நீக்குவதுடன் இலாபத்தைத் தரக்கூடிய முறை

---

தமிழ்நாட்டில் தமிழரசுக் கட்சியின் பிரபல தலைவர் திரு ம. பொ. சிவஞான கிராமணியார் (எப். எல் ஏ) இந்தியாவிலுள்ள தமிழ் பேசாத பிற மாநில மக்களை ஏமாற்றுவதில் நம்பிக்கை இல்லாதவர் அவரது கட்சி வெளிப்படையாகவே (தமிழிலும் ஆங்கிலத்திலும்) தென்இந்தியாவில் தமிழ் அரசாட்சியை நிறுவப்போவதாகச் சொல்லுகிறது.

சமஷ்டி அரசியல்திட்டம் என்று ஆங்கிலத்தில் சொல்வதற்கு முற்றிலும் வேறுபட்ட சென்னையிலுள்ள தமிழரசுக் கட்சியின் பெயரை இவர்களும் ஏன் வைக்க வேண்டும் என்பதை இப்பொழுதாவது இவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். இவர்களுடைய கட்சியின் சாதுரியமான பேச்சு மக்களுடையகோபத்திலிருந்து காப்பாற்ற முடியாது.

4-7-70ல் டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளியான எனது கட்டுரைக்கு பதிலளிக்க முனைந்த திரு கே பி இரத்தினம் எம் பி எனது வாதத்தின் வன்மைக்குச் சரியான பதிலளிக்காமல் மழுப்பிவிட்டிருக்கிறுர்.

1965—70ம் ஆண்டு காலத்தில் அன்றைய அரசாங்கத்தில் திரு ரத்தினம் கூட ஓர் உறுப்பினராக வந்துள்ள போதிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகசபையில் ஒரு தமிழரும் இல்லாதிருந்ததுபற்றி சமஷ்டிக் கட்சியினர் பிரச்னையொன்றையும் கிளப்பவில்லை என்பதைத்தான் நான் நிலைநிறுத்த முயன்றேன். திரு ரத்தினம் இதுபற்றி பிரதம மந்திரியையும் பல தடவைகள் எடுத்தியம்பியிருப்பார் என்ற உண்மை இங்கு அர்த்தமற்றது என்பது போக திரு ரத்தினம் போன்றவர்களின் புகார்களை எவ்வாறு யுஎன் பியினர் மதித்திருக்கிறுர்கள் என்பதையும் இது காட்டுவதாய் இருக்கின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தில் ஒரு தமிழரை நியமிப்பதற்கு நான் எதிரானவன் என்று குறிப்பிடுவது மிகப் பெரிய அபாண்டமாகும்

எனது உண்மையான நிலையை 16-7-70 இலங்கை டெயிலிநியூஸில் வெளியான எனது கட்டுரையில் உள்ள பின்வரும் பகுதி தெளிவுபடுத்தும்.

லும் இவரும் சமஷ்டிக் கட்சியினரும் ஏன் என்னை எதிர்த்தார்கள்( இவர்கள் மேலும் எனக்குவாக்களிக்கவேண்டாமென்றும் ஐ தே கட்சிவேட்பாளருக்கு வாக்களிக்குமாறும் இவ்வட்டாரத்திலுள்ள தமிழ்வாக்காளர்களை கேட்டுக்கொண்டது ஏன் இதனுல் நான் தோல்வியுற்று ஐ தே கட்சி வேட்பாளர் (திரு சால்கடோ) வெற்றிபெற்றதும் உண்மை. தமிழ்கட்சியாகவன்றி சமஷ்டிக்கட்சியினர் ஐ தே கட்சியாக இருப்பதை இந்நிகழ்ச்சி காட்டப் போதுமானதல்லவா?

ஒருவன் என்னத்தைச் சிந்திக்கிறுனே அதைப்பற்றியே திரும்பத்திரும்பச் சிந்திப்பவனே தத்துவஞானி எனச் சொல்லப்படுகிறது. திரு இரத்தினம் 16-7-70-ல் அளித்த பதிலைக்கொண்டு தன்னை ஒரு தத்துவஞானி எனச் சொல்லமுடியாது. இருந்தபொழுதிலும் எனது கட்டுரைபற்றி இவர் நன்றுகச் சிந்தித்திருப்பின் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுஸ்தாபனத்திற்கு தமிழர் ஒருவரை நியமிப்பதை நான் எதிர்க்கிறேன் என்று ஒரு முடிவுக்கு வரமாட்டார்

சமஷ்டிக்கட்சியினரும் திரு இரத்தினமும் ஐ தே கட்சியுடன் சேர்ந்து அரசாங்கத்தை நடத்துவதிலும் தமிழரான செனட்டர் திரு எம் திருச்செல்வம் அமைச்சராக இயங்குவதிலும் சில வசதிகளைக்கண்டனர் ஏன் சமஷ்டிக்கட்சியினர் தற்போது திரு குமாரசூரியரைத் தவறுமல்தாக்குகின்றனர்(சமஷ்டிக்கட்சிப் பத்திரிகையான 'சுதந்திரன்' வாரஇதழ் ஒவ்வொன்றிலும் இதைச் செய்கிறது) தமிழர்களால்தெரிவு செய்யப்படாத ஒருவரை அமைச்சராக நியமித்துள்ளதாகவும்கூறி எதிர்ப்புத்தெரிவிக்கின்றனர்: 1965-1969ம் ஆண்டுகளுக்கிடையே ஐ தே கட்சி-சமஷ்டிக்கட்சி அரசாங்கத்தில் திருச்செல்வம் அமைச்சராக இருந்த பொழுது எந்தத் தொகுதியின் பிரதிநிதியாக இருந்தார்.

சமஷ்டிக்கட்சியினர் தமிழரைவழிநடத்துவதில் கடைசியாகக் கூறியது:

'தமிழர்களுடையமொழிப்பிரச்னை அவர்களுடைய மனம் திருப்தி அடையும் முறையில் தீர்க்கப்படும் வரையில் தமிழ்பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதைத் தவிர்க்க வேண்டும் (டெயிலிநியூஸ் 17-8-70 பக்கம் 1) இக்கோரிக்கை புதியதொன்றல்ல.

இதே அடிப்படையில் தமிழ் அரசாங்க ஊழியர்களை சிங்களம் படிக்கவேண்டாம்என்றுமுன்னர்சமஷ்டிக்கட்சியினர்கூறிவந்தனர் அவர்கள் வழிகாட்டுகிருர்களோ இல்லையோ, தமிழரசுக் கட்சிச் செயலாளராயிருந்த, டாக்டர் நாகநாதன் உட்பட தமிழரசுக்கட்சியினரின் பிள்ளைகள் பலர் சிங்களம் கற்கிருர்கள் என்பது உண்மை.

சமஷ்டி அரசியல் அமைப்புக் கோரிக்கையை கைவிட்டாலொழிய இந்தநாட்டிலுள்ள தமிழ் மக்களை எதிர்நோக்குப் பிரச்னைகளைத் தீர்க்கவியலாது என்பதை இப்பொழுது சமஷ்டிக் கட்சியினர் உணரவேண்டும்.

சி வைகுந்தவாசன்
கொழும்பு

---

பல வருடங்களுக்கு முன்பாக அட்டனிலிருந்து ஒரு பாதிரியார் தம்மாலும் இப்படிச் செய்யமுடியுமென்று காட்ட, கதிர்காமம் சென்றுர். அவர் தீயில் இறங்கி நடந்ததும் கால் சுட்டு புண்ணுகி, கொப்புளங்கள் ஏற்பட்டன. அவர் ஆஸ்பத்திரியில் பலநாள் இருந்து சிகிச்சை பெற வேண்டியதாயிற்று. தமது அனுபவங்களைப் பற்றி அவர் 'டைம்ஸ்' பத்திரிகையில் எழுதியிருந்தார். மீண்டும் தாம் முயற்சி செய்யப்போவதாயும் தெரிவித்தார். ஆனுல் அவர் அப்படிச் செய்தாரோ தெரியவில்லை. அவர் சீமைக்குத் திரும்பிவிட்டதாக அறிகிறேன்

அப்பாதிரியார் செய்ய முடியாததை, வைத்திய மாணவர்கள் இப்போது செய்கிறுர்கள். தீயைச் சரிக்கட்டிக்கொடுத்தால் தாங்கள் எங்கும் இதைச் செய்து காட்டுவதாகவும் வைத்தியக் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் தெரிவிக்கின்றுர், பகுத்தறிவு இயக்கத் தலைவரான ஆப்ரகாம் கோவூர் என்பவர், தம் வாய்க்குள் எரியும் நெருப்பைவிட்டுவிட்டு அதே காட்சியில் காட்டினுராம். சுவாசத்தை உள்ளே இழுக்காமல் வாயால் வெளியே விட்டுக்கொண்டே எரியும் நெருப்பை வாய்க்குள் விட்டுக்கொண்டால் அது சுடாதென்றும் விளக்குகின்றுர். நெருப்பை அவர் 'விழுங்குவ'தாக ஓர் ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது.

கோயில்களில் தீமிதியல் நடபது, பிறருக்கு வேடிக்கை காட்ட அல்ல. தங்கள் பிரார்த்தனையைச்செலுத்தத்தான் சிலர் தீ மிதிப்பது. தங்கள் உடலையே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் பாவனையே இது. மற்றவர்களால் இது முடியாதென்று அவர்கள் யாருக்கும் சவால் விடுவதுமில்லை. அந்த

---

படப் பல தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸில் புகார்செய்யப் இத்திருட்டு சம்பந்தமாக தீவிர விசாரணை செய்து வருகின்றுர்கள்.

# ஐக்கிய உள்ளூராட்சி சேவை ஓவசியர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

புலோப்பளைக் கிராமசபையில் ஓவசியர்களாகக் கடமையாற்றிய க சுப்பிரமணியம், ச, கனகரத்தினம் அ. செபஸ்தியாம் பிள்ளை ஆகியோருக்கும் தற்போது கடமையாற்றும் வ கதிர்காமநாதனுக்கும் புலோப்பளைக் கிரமசபைத்தலைவர் அநீதி விளைவித்ததாக நேற்று நடைபெற்ற ஐக்கிய உள்ளூராட்சி சேவை ஓவசியர் சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது தற்போது கடமையாற்றும் ஊழியருகு பூரணையாக வேதனம் வழங்கப்படுவதில்லையென்றும், கடந்தமாத வேதனம் முழுவதுமே இதுவரை வழங்கப்படவில்லையெனவும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இதுசம்பந்தமாக உடனடி நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் உள்ளூராட்சி அதிகார சபைத்தவருடனும் தேவை யேற்படின் உள்ளூராட்சி அமைச்சருடன் தொடர்பு கொள்ளுவதென்றும், ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது இதற்கென ஐவர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டது,

சங்கத்தின் வருடாந்த மகாநாட்டை நவம்பர் 29ம் திகதி காங்கேசன்துறையில் நடத்துவதென்றும், உள்ளூராட்சி அமைச்சர், உதவி அமைச்சர், அதிகாரசபைத் தலைவர், நிரந்தரக்காரியதரிசி மற்றும் காங்கேசன் துறைத் தொகுதி எம் பி தொகுதியிலுள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களை இம் மகாநாட்டிற்கு அழைப்பதென்றும், இம்மகாநாடு நடைபெறுமுன் ஓவசியர்கள் பயிற்சி வகுப்பு வேலை அதியட்சகர் பதவிப் பெறுபேறுகள், வேதன மாற்றம் மற்றும் ப விஷயங்கள் சம்பந்தமாகவும் சம்பந்தப்பட்டவர்களுடன் மேலே தெரிவு செய்யப்பட்டகுழு பேசிநடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வீதி போக்குவரத்து

# பாதுகாப்பு சட்டம் திருத்தி அமைகககப்படும்

கோட்டை, செவ்வாய்

நாட்டில் விபத்து விகிதம் தினமும் அதிகரித்து வருவதைத் தடுப்பதற்கு வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புச் சட்டத்தை திருத்தியமைக்கப் போக்குவரத்தமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனு தீர்மானித்துள்ளார்.

மேற்படிசட்டம் கொண்டுவரப்பட்டுப் பதினேழு வருடங்கள் ஆகின்றனவெனவும் நாட்டை தற்போது எதிர்நோக்கியுள்ள போக்குவரத்துப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இது ஒவ்வாதது எனவும் பொலிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிசார் இச் சட்டம் பற்றித் தெரிவித்துள்ளதாவது: விபத்துக்களைக் குறைக்க வேண்டுமானுல் சட்டத்தை அமுலாக்க வேண்டும். செயல் படுத்த வியலாத சட்டமானுல் அது இருந்து என்ன பிரயோசனம். தற்போதுள்ள சட்டம் மோட்டார் வாகனக்காரர்களை மட்டுமன்றிப் பாதசாரிகளையும் பாதிக்கிறது.

சட்டம் திருத்தியமைக்கப் படுவதோடு இலங்கை வீதிகளும் திருத்தியமைக்கப்பட வேண்டும். இலங்கையிலுள்ள அநேகமான வீதிகள் தற்போதைய வாகனங்களுக்குப் பொருத்தமானவைகளாக அமையவில்லை. வண்டிப் போக்குவரத்துக்கே உரியனவாகவுள்ளன. இந்த வீதிகள் தற்போதைய வாகனப் போக்குவரத்துக்கு உகந்தவைகளாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

# 'விசேஷபடி வழங்கவேண்டும்'

— உதவிஅமைச்சர்

மாத்தறை, செவ்

கஷ்டமான பகுதிகளில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேஷ அலவன்ஸ் வழங்கவேண்டும், இப்படிச் செய்தால்தான் ஆசிரியர்களின் இடமாற்றத் திட்டத்தை நிறைவேற்ற முடியும்,

இவ்வாறு உதவிக் கல்வி அமைச்சர் திரு பி, வை, துடாவை கேகெலவெல வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் தெரிவித்தார்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org